மாஸ்டர் சி.வி.வி.நமஸ்காரம்

அதீத காய கல்பம்

அல்லது

ஸ்தூல சாஸ்வதம்



ஆசிரியர் : T.S. இராமானுஜம்

மாஸ்டர் சி.வி.வி. யோகா டிரஸ்ட்

சென்னை - 600 040.

மாஸ்டர் சி.வி.வி. நமஸ்காரம்

அதீத காய கல்பம்
அல்லது
ஸ்தூல சாஸ்வதம்

ஆசிரியர்:
T.S. இராமானுஜம்

தமிழாக்கம்:
ஆ.ஷண்முகம்

வெளியிடுவோர்:
மாஸ்டர் சி.வி.வி. யோகா டிரஸ்ட்
A.C. 126 (புது எண். 222) சாந்தி காலனி
அண்ணா நகர், சென்னை - 600 040.
தொலைபேசி : 26213580

முதற்பதிப்பு : 1940
[illegible]ம் பதிப்பு : 2006

விலை ரூ. 20

பொருளடக்கம்

முன்னுரை

இந்த சிறு புத்தகத்தை ஆழ்ந்து கவனத்தோடு படிக்கும் ஒருவருக்கு மாஸ்டர் சி.வி.வி. என்பவர் யார் என்பது சுலபமாகவே தெரிந்து விடும். அதாவது அவர் பிரம்மமே, சிருஷ்டி கர்த்தாவே மனிதனாக மாறி வந்தவர் A.T.M. ஏ.டி.எம். மனிதனாகப் பிறந்து பிரம்ம ஞானியாக மாறியவர் M.T.A எம்.டி.ஏ என்பதை தெரிந்து கொள்ளலாம். (A. ஏ- ஆரிஜின் கிருஷ்டி கர்த்தா T. டி மாறியவர் (டர்ன் ஆனவர்) M.எம் மனிதன்) புறவாழ்வு என்பதே ஆன்மீக வாழ்வுக்கு முன்னோடியாக இருக்குமாதலால் அவரது புற வாழ்வைப்பற்றி நாம் தெரிந்து கொள்ள முற்படுவோம்.

மாஸ்டர் சி.வி.வி அவர்கள் 1868 ம் வருடம் ஆகஸ்டு மாதம் 4ம்தேதி கும்பகோணம் என்ற நகரில் கன்சுபாடி என்ற நாமமுள்ள தெலுங்கு நியோகி பிராம்மண குடும்பத்தில் பிறந்தார். இவர் இளமையிலேயே தனது அத்தை புருஷனால் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளப்பட்டார். அவருடைய பெயர் கன்சுபாடி வெங்கடராவ் என்பதாகும். எனவே தான் இந்த குழந்தைக்கு கன்சுபாடி வெங்கடராவ் வெங்காசாமி ராவ் என்ற பெயர் ஏற்பட்டது.

செல்வம் மிகுந்த குடும்பத்திற்கு ஸ்வீகாரம் வந்ததால் இவருடைய இளமை வாழ்வு சகல சம்பத்துடன் கோலாகலமாக இன்ப வாழ்வாக அமைந்தது. எனவே நன்றாக கல்வி பயின்று ஆங்கிலம், தெலுங்கு, தமிழ், சமஸ்கிருதம் ஆகிய நான்கு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றார். இந்த சுகபோக வாழ்க்கையிலும் கூட அவர் கருணையுள்ளம் கொண்டவராகவும் பரோபகார சிந்தையுடையராகவுமே வளர்ந்து வந்தார். நல்லவை கெட்டவை என்ற பகுத்தறிவு ஏற்பட்டது முதற்கொண்டே அவர் எல்லோரோடும் அளவற்ற அன்போடும் கருணையுள்ளத்தோடும் பழக ஆரம்பித்தார். அண்மையில் யாரேனும் மரணமுற்ற செய்தி

கேட்டால் அதனால் உடன் ஆழ்ந்த வருத்தத்தில் மூழ்கி விடுவாராம்.

எனவே மரணத்தை வெல்லும் மார்க்கத்தைப் பற்றி யோசிக்கலானார். ஆகவே தனது 30ம் வயதிலிருந்தே இவர் துக்கம், முதுமை, மரணம் ஆகிய வாழ்க்கைச் சிக்கல்களிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழி முறைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்ய முற்பட்டார். ஆன்மீக சித்தாந்த நூல்களை ஆராய்ந்தறிந்து தன்னுடைய உள்ளாழ்ந்த சிந்தனை மூலம் தன் ஜீவாத்மாவின் தரிசனம் பெற்றால் மட்டுமே இந்த சிக்கல்களுக்கெல்லாம் தக்க விடையும் பரிகாரமும் கிடைக்கும் என்று உணர்ந்தவராய் யோக தியான முறைகளை பரிசீலிக்கலானார்.

1900 ம் ஆண்டு முதலாகவே தன் உள்ளார்ந்த இச்சையாகிய மரணமிலாப்பேரின்ப வாழ்வை அடைவதற்கான யோக முறையைத் தேட முற்பட்ட போது, தனக்குள்ளிருந்து தன்னை வழி நடத்தி வரும் தனது ஜீவாத்மாவையே தனக்கு வழிகாட்டியாக குருவாக கொள்ள வேண்டுமென்ற முடிவுக்கு வந்தார். அதன் படியே தனது ஜீவாத்மாவை தனது குருவாகக் கொண்டு தியானம் செய்து அதன் பயனாக கீழ்க்கண்ட உண்மைகளைக் கண்டறிந்தார்.

1. உயிரினப்பெருக்கத்திற்கான சிருஷ்டி இரகசியங்களே மனித உற்பத்திக்கான ஆன்மீக குறிக்கோளையும் ஸ்தூல சரீரத்தின் சிருஷ்டிக் கிரமத்தையும் காட்டிக்கொடுக்கும்.

2. எல்லா மனிதருக்குள்ளும் உள்ளிருந்து அவர்களை இயக்கி வருவது ஒரே ஒரு உயிர் தான். இதை தலைமை உயிர் அல்லது சீப் லைப் - Chief Life என்று குறிப்பிடலாம்.

3. இந்த இனவிருத்திக்கு காரணமாய் இருந்து ஊக்குவித்து வரும் பாலுணர்ச்சியின் இரகசியத்தை காட்டிக்கொடுக்கும்

சக்தி இயற்கையாகவே மனிதனின் மனோசக்திக்கு உண்டு.

4. இந்த தலைமை உயிரானது கால வரம்புக்கு உட்பட்டதாகும். (அளவுக்குட்பட்டதாகும்).


5. கால வரம்புக்குட்படாத, மாறுபாடுகளுக்கு (சுகம், துக்கம், இளமை, முதுமை ஆகிய மாறுபாடுகள்) உட்படாத சாஸ்வதமான, நிலையான, ஆனந்த உயிர் இதுவரையில் சிருஷ்டிக்கிரமத்தில் ஏற்பட்டிருக்கவில்லை.

இத்தகைய பேரின்ப உயிர் எங்குள்ளது என்று தேடிக் கண்டுபிடித்து அந்த ஆனந்த உயிர் மனித சரீரத்திற்குள் புகுந்து வேலை செய்யும்படி செய்வதன் மூலமே துக்கமற்ற மரணமற்ற பேரின்பப் பெரு வாழ்வை சாஸ்வதத்தை இந்த பூமியில் நிலை நாட்ட முடியும். வேறு வழியில் மாஸ்டர் சி.வி.வி அவர்களின் குறிக்கோளான சாஸ்வதத்தை அடைய முடியாது.

மாஸ்டர் சி.வி.வி அவர்கள் இவ்வாறான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்த தருவாயில் சிருஷ்டிகர்த்தாவின் அருளாட்சிக்குட்பட்டு 1910ம் ஆண்டு ஹாலிஸ் வால் நட்சத்திரம் பூமியில் காசஷியானது. மாஸ்டர் அவர்களின் ஆக்கினைப்படி அது பூமியைத் தொடவும், அதையே கருவியாகக் கொண்டு தனது நூதன சிருஷ்டி முறையை சாஸ்வத தன்மையடங்கிய சிருஷ்டி ஞானத்தை பூமியில் பொழியும் படி செய்தார். இதன் மூலம் அழிவில்லாத மனித சமுதாயத்தை பூமியில் உண்டாக்கி வைக்கவும், சிருஷ்டி இரகசியங்களை உணர்ந்து கொண்டு அவற்றை உபயோகித்து பூரண ஞானத்தையும், விழிப்பு நிலையிலேயே அடைந்து பேரின்பப் பெரு வாழ்வையடையவும் வழிவகைகளைக் கண்டார். மேலும் சிருஷ்டி பரிமாண வளர்ச்சியின் குறிக்கோளும் அழியா பேரின்ப வாழ்வை அளிப்பதேயாகும் என்றும் தெரிந்து கொண்டார்.

இவ்வாறாக இப்பிரபஞ்ச சிருஷ்டி கர்த்தாவுக்கும் தன் ஜீவாத்மாவுக்கும் பிரிக்க முடியாத தொடர்பு ஏற்படுத்திக் கொண்ட பின்பு, இந்த ஆனந்த அனுபவத்தை தன்னை சுற்றியிருந்த இதர மக்களோடும் பகிர்ந்துக் கொண்டு, எல்லா மக்களையுமே அந்த உயர்ந்த பிரம்ம ஞான நிலைக்கு உயர்த்தித் தர முடியும் என்ற உறுதி பெற்றார். இந்த மன உறுதியோடும் ஆதங்கத்தோடும் 1910 ம் வருடம் மே மாதம் 29 ம் நாள் அன்று தற்சமயம் நாம் அப்யசித்து வரும் பிருக்த ரஹித தாரக இராஜ யோக முறையை ஆரம்பித்து வைத்தார்.

இந்த யோக முறையின் ஆரம்பம் தற்செயலாக ஏற்பட்டதா அல்லது பரிணாம வளர்ச்சியின் விதிமுறைக்குட்பட்டே ஏற்பட்டதா என்பது எளிதில் தெரிந்து கொள்ள இயலாத ஒரு வியப்பாகவே இருந்து வருகிறது.



யோகாலய மித்திர சங்கம், கும்பகோணம்

1. குறிக்கோள்

சிருஷ்டிக்கிரம பரிணாம வளர்ச்சியின் அடுத்த கட்டமாயிருக்கும் இறுதி எல்லையாகிய ஸ்தூல சாஸ்வதத்திற்கு மனிதனைக் கொண்டு செல்வதற்கே இந்த யோகாலய மித்திர சங்கமானது மாஸ்டர். சி.வி.வி அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த யோக சாதகர்கள் மிகச் சுலபமானதும் ஆனால் மிகவும் பயன்தரக் கூடியதான ஒரு யோக முறையை அப்யசித்து வருகிறார்கள். கிரக கோளாறுகளிலிருந்தும் பாதிப்புகளிலிருந்தும் நிவர்த்தி பெருவதோடு சரீர குறைபாடுகள் சீராக்கப்பட்டு ஆன்மீக தேர்ச்சி அளிக்கப்படுகிறார்கள். ஏழு ஆதார நிலைகளும் சீரமைக்கப் படுவதோடு, போதிய தேர்ச்சி பெற்ற பிறகு விஷக்கடிகளுக்கும் நோய் நொடிகளுக்கும் சிகிச்சை அளிக்கும் சக்தியும் அளிக்கப்படுகிறார்கள்.

அளவற்ற பிராணன் அளித்தல் அதாவது ஆனந்த உயிர் அளித்தல், தூக்க மயக்கம், கனா மயக்கம், பேச்சு மயக்கம் ஆகிய மயக்கங்களை நீக்கி அயராவிழிப்புணர்வு நிலையளித்தல், முதுமைப் பேறடைவதை தடுத்து வாழ் நாட்களில் ஆயுளை நீட்டிக் கொடுத்தல், உருவ மாறுபாடற்ற ஸ்தூல சாஸ்வதத்தை அளித்தல், செத்தவரை எழுப்பும் சக்தி அளித்தல், இறந்தவரை திரும்பி அழைத்தல், அயரா விழிப்பு நிலையைக் கொடுத்து சிருஷ்டியின் இரகசியங்களை அறிந்து கொள்ளவும் சிருஷ்டி கர்த்தாவை தரிசித்தலும் ஆகிய சித்திகளை அளிப்பதாக ஆறு வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருக்கிறது.

(குறிப்பு: இவை யாவும் யோக பூர்த்திக்குப் பிறகு அடையக் கூடியனவாகவே காணப்படுகிறது. ஆ. ஷண்முகம்).

இவை எல்லாவற்றையும் அடைய ஒரு சாதகன் செய்ய வேண்டியதெல்லாம் தீக்ஷை பெற்ற தினத்திலிருந்து நாள்தோறும் காலையும், மாலையும் தவறாமல் அப்பியசித்து வரவேண்டிய கடமை ஒன்று மட்டுமே. யாரேனும் ஒரு மித்திரர் தவறாமற்படி இந்த யோகத்தைச் செய்து பூர்த்தியை அடைந்தால் அது எல்லா மித்திரர்களுக்குமே பயன் தருவதாக அமையும். அதே பூர்த்தி படிப்படியாக எல்லோருக்குமே கிடைக்கும். நாளடைவில் இந்த யோகம் உலகம் முழுமையும் பரவி, நோய்களும், துன்பங்களும், அழிவு, வஞ்சகம், பொறாமை முதலிய தீமைகளும் கூட விரட்டியடிக்கப்பட்டு எங்கும் அமைதியும் ஆனந்தமும் உண்டாகும்.

2. அங்கத்தினர் சேர்க்கை

எந்த ஒரு மனிதனும் ஆணானாலும் பெண்ணானாலும் இந்த யோகத்தில் சேரலாம். மேலும் யோகம் பூர்த்தியடைந்த தருவாயில் அவரவர் எந்த நிலையிலிருந்தாலும் எல்லோரும் ஒரே சமநிலையில் வைக்கப்படுவார்கள். காலக்கிரமத்தில் சில விதிமுறைகள் உண்டாகியிருக்கின்றன. தீக்ஷையின்போது அவரவர் விருப்பப்படும் நன்கொடை கொடுக்கலாம். இது யோகாலய பராமரிப்புக்கு மட்டுமே செலவு செய்யப்பட்டு வரும். சேருபவர் 16 வயது பூர்த்தியடைந்தவராக இருக்க வேண்டும். அவர் ஏதேனும் ஜபதபங்கள், மந்திர உச்சாடனங்கள் உபாசனைகளில் ஈடுபட்டிருந்தால் அவற்றைக் கைவிட வேண்டும். இதற்குக் காரணம் எந்த ஒரு சக்தியும் மாஸ்டர் அவர்களின் சக்திக்கு மேற்பட்டதாக இருக்க முடியாது என்பதாலேயே ஆகும். மாம்சம் சாப்பிடுபவராய் இருந்தால் அதை மாற்றிக்கொள்ளும்படி உபதேசிக்கப்படுவார். ஒருவர் பிரம்மச்சாரியாகவோ மனைவியை இழந்தவராகவோ இருந்தால் குடும்ப வாழ்வைப் பற்றி வெறுப்பு காட்டக்கூடாது என்று போதிக்கப்படுவார்.

மாஸ்டர் அளவற்ற கருணையுள்ளம் படைத்தவராய் இருப்பதால் அவருடைய அருளாசி குடிகாரன், படிக்காதவன், கோணல் புத்தி படைத்தவன் ஆகிய யாவருக்குமே ஏதும் தடையின்றி கிடைக்கும். அவரிடம் ஒரு போதும் பாரபக்ஷம் காண முடியாது. எல்லோரையும் சமநிலையிலேயே கண்காணித்து வருவார். இதனால் ஒரு குடிகாரன் நாளடைவில் குடிப்பழக்கத்தை கை விடுவதும் , நயவஞ்சகன் நாளடைவில் திருந்தி நல்லவனாக மாறிவிடுவதையும் காணலாம். தவறு செய்வது மனித இயல்பு. ஆனால் மன்னித்து ரக்ஷிப்பது தெய்வ குணம் என்பதை மாஸ்டர் உணர்ந்திருப்பவர் ஆவார். "என்னை எவ்வகையிலும் சீர்திருத்தி, எனக்கு தேர்ச்சியைக் கொடு" என்பதே அவரது உபதேச வாக்கியமாகும். தண்டனை என்பது அவரது யோக முறையில் இல்லை. குற்றத்தை உணர்ந்து மன்னிப்பு கேட்டால் அதுவே அக்குற்றத்திற்கு பரிகாரமாக கருதப்படும். மீண்டும் குற்றம் புரியாதிருத்தல் போதுமானதாகும்.

1910 முதல் 1922ம் ஆண்டுவரை மாஸ்டர் சி.வி.வி.அவர்கள் மொத்தம் 752 சாதகர்களை சேர்த்தபின் அவருடைய சீடராகிய என்.ஆர்.பி. வெங்கிடாசலபதி அவர்கள் தீக்ஷையளிக்கும் சக்தியை 1930ல் பெற்று அதிலிருந்து சீடர்களைச் சேர்த்து வருகிறார். அவர் இதுவரை (1940 வரை) சுமார் 80 சீடர்களை சேர்த்திருக்கிறார். தீக்ஷை பெற விரும்புவர்கள் (யோகாலய மித்திர சங்கம், 2 கீழ டபீர் தெரு, கும்பகோணம்) என்ற விலாசத்திற்கு எழுதி தொடர்பு கொள்ளலாம்.

3. தீக்ஷை முறை

ஜீவாத்மா என்று பொதுவாக அழைக்கப்பட்டு வரும் உயிர்சக்தியானது மனித இருதயத்தில் ஒரு புள்ளிவடிவமாக

இருந்து வருகிறது. மாஸ்டர் இதை "ஸ்டெபிலிடி" என்று பெயரிட்டுள்ளார்.

ஸ்டேபிள் ஆக இருக்கக்கூடியது, ஸ்திரமாக நிலைத்திருக்கக்கூடியது என்ற அர்த்த்திலேயே இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. நமது யோகப் பூர்த்தி காலத்தில், கால வரம்புக்கு உட்பட்டு இயங்கி வரும் இந்த ஜீவாத்மா, இன்ப துன்பங்களுக்கு ஆட்பட்டிருக்கும் ஜீவாத்மா, முதுமை, மரணம், விருப்பு, வெறுப்பு ஆகிய இடர்பாடுகளுக்குட்பட்டு இயங்கிவரும் ஸ்டெபிலிடி என்றும் தலைமை உயிர் Chief Life சீப்லைப் என்றும் அழைக்கப்பட்டு வரும் ஜீவாத்மா அழிவற்ற, மாறுபாடற்ற, மரணமற்ற, நோய் நொடியற்ற ஆனந்த உயிரால் நிரம்பப் பெற்று சாஸ்வத தன்மை அடையும். இதை மாஸ்டர் மெர்ரி லைப் Merry Life ஆனந்த உயிர் என்று அழைத்துள்ளார். தற்போது இந்த ஆனந்த உயிரானது மாஸ்டர் பாதுகாப்பில் மனித சமுதாயத்தின் நன்மைக்காக பத்திரமாக இருந்து வருகிறது. மேலும் உருவமாறுபாடில்லாத ஸ்தூல சரீரமும் இந்த ஆனந்த உயிர் நிலைத்திருப்பதற்காகவே அமைத்துத்தரப்படும்.

மாஸ்டர் பாதுகாப்பில் இருந்து வரும் ஆனந்த உயிர் மனித சரீரத்திற்குள் புகுந்து வேலை செய்ய முற்பட்டதும், இந்த யோகத்தின் குறிக்கோளாகிய ஸ்தூல சாஸ்வதம் என்பது பூர்த்திக்கு வரும். ஆனால் இன்றுள்ள மனித சரீரம் இந்த ஆனந்த உயிர்ப்பிரவாகத்தின் அழுத்த சக்தியை தாங்கக்கூடியதாயில்லை. எனவே இந்த சரீரம் சீரமைக்கப்பட்டு தூய்மையாக்கப்பட்டு கெட்டிப்படுத்தப்பட வேண்டியுள்ளது. இந்த கட்டுமான வேலையானது இன்றைய பிரபஞ்ச பரிணாம வளர்ச்சி திட்டத்தின் கிரமப்படியே நடப்பதாயிருந்தால் இதற்கு இன்னும் பல்லாயிரம் ஆண்டு காலம் ஆகலாம். இந்த வேலையைத் துரிதமாக செய்து முடிக்கவே இந்த நூதன யோகமுறை மாஸ்டரால் வகுக்கப்பட்டுள்ளது. இதன்படி மாஸ்டரின் அனுபவம்

பெற்ற உயிரின் அணுப்பகுதி சாதகரின் சரீரத்தில் புகுத்தப்பட்டு, அந்த அனுபவமானது சாதகரின் ஜீவாத்மானவ ஒரு போர்வை போல் கவர்ந்து கொண்டு, அந்த பிரம்மானுபவத்தையும் சாஸ்வதத்தன்மை அடைய வேண்டும் என்ற பிரம்ம சங்கல்ப்பத்தையும் சிறுகச் சிறுக அந்த ஜீவனோடு இணைத்து, இதை செயலுக்கு கொண்டு வருகிறது. இதனால் சிறுகச் சிறுக தூய்மையடைதலும், சீரமைத்தலும், கெட்டிப் படுத்தலும் ஆகிய கட்டுமானப்பணிகள் செவ்வனே நிறைவேற்றி வைக்கப்படுகின்றன.

இந்த இணைப்பானது உபதேசம் அல்லது தீக்ஷை பெற்ற சில வினாடிகளிலேயே மாஸ்டருடைய ஜீவாத்மாவுக்கும் சாதகருடைய ஜீவாத்மாவுக்கும் இடையே ஏற்பட்டு விடுகிறது. சாதகர் இதன் பிறகு மீடியம் என்று அழைக்கப்படுவார். இதன் காரணமாக தீக்ஷை பெற்ற சாதகரின் சரீரத்தில் என்னென்ன மாறுபாடுகள் ஏற்பட்டாலும், அது மாஸ்டருடைய சரீரத்திலும் அப்படியே பிரதிபலிக்கும், மாஸ்டருடைய ஜீவாத்மா இதனால் இரண்டு சரீரங்களில் வேலை செய்ய வேண்டியதாக ஏற்படும். இதன் காரணமாக இந்த சாதகருக்கு உள்ளிருந்து கொண்டே மாஸ்டருடைய வழிகாட்டுதலும் பாதுகாத்தலும் தொடர்ந்து நடந்து வரும். சாதகரைப்பொருத்தவரையில் மாஸ்டர் உள்ளிருந்து வேலை செய்யும் அதே நேரத்தில் வெளியிலிருந்தும் அவரை பாதுகாத்து வருவார். ஒரு சீடன் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் அவனுடைய எண்ணங்களுக்கு பதிலும், சந்தேகங்களுக்கு விளக்கங்களும் உள்ளிருந்தே கிடைத்து விடும். சீடனுடைய சங்கடங்களுக்கும் பரிகாரம் உடனுக்குடனேயே கிடைத்துவரும், தேவைகளும் பூர்த்தியாகும். குறைகள் நிவர்த்திக்கப்படும், தேர்ச்சியும் தொடர்ந்து கிடைத்து வரும். மாஸ்டர் சக்தி உள்ளிருந்தே வேலை செய்வது நமது

பக்கத்திலிருக்கும் ஒரு பக்கத்து வீட்டுக்காரர் உதவுவது போன்றே இது நடந்துவரும்.

மாஸ்டருடைய ஜீவாத்மா உள்ளிருந்து கொண்டே சீடனுடைய ஜீவாத்மாவுக்குள் சாஸ்வதம் என்கிற தன்னுடைய சங்கல்பத்தால் நிரம்பும் படி செய்து, பலஹீனங்களை குறைபாடுகளை நீக்கி சீரமைத்து ஆனந்த உயிர் வந்தடைவதற்கான தகுதியை, பலத்தை ஏற்படுத்திக்கொடுக்கும். கிரகங்களின் பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கவும், கர்மவினைகளால் ஏற்படும் தண்டனைகளிலிருந்து காப்பாற்றியும், விதி வசமாக அனுபவிக்க வேண்டியிருக்கும் துன்பங்களின் பாதிப்பை கூடுமான அளவுக்கு குறைத்தும் மேற்கொண்டு எடுக்க வேண்டிய பலவான ஜன்மங்களை அடியோடு ஒழித்தும் இந்த ஜன்மத்திலேயே மாஸ்டருக்குச் சரி சமமான பிரம்ம ஞான நிலையை மாஸ்டர் அருள்வார். சீடனின் சரீரத்தில் இருந்து கொண்டே இம்மாதிரி பாதுகாப்பும் தேர்ச்சியும் கொடுப்பது இந்த தீக்ஷை முறையின் அதி விசேஷ பயனாகும்.

இந்த யோக பூர்த்தியை துரிதப்படுத்தும் நிமித்தமாக மாஸ்டர் அவர்கள் தற்காலிகமாக இந்த பூமியை விட்டு மேல் நிலையில் சஞ்சாரம் செய்ய வேண்டி ஏற்பட்டாலும், இதனால் சீடருக்கு கிஞ்சித்தும் பாதகம் ஏற்படாது. மேலும் சீடருடைய தேர்ச்சி முழுமை பெற்றதும் தானே மாஸ்டரை ஸ்தூல சரீரத்தில் திருப்பி அழைக்கும் வல்லமையையும் பெறக்கூடும். அச்சமயத்தில் மாஸ்டரை ஏக காலத்தில் சூக்ஷமத்தில் உள்ளும், ஸ்தூலத்தில் வெளியிலும் பார்க்கும் பேரானந்தம் கிட்டும். இவ்வாறான அதிசய பலன்களைத் தரக்கூடிய தீக்ஷை முறையை இந்த நூதன யோகத்தைத்தவிர பழைய யோக முறைகளிலோ, மற்றும் நூதனயோக முறைகளிலோ அல்லது வேறு எந்த யோக முறையிலும் கூட காண இயலாததாகும்.

4. பயிற்சி முறை

தீக்ஷையளிக்கும் போது சாதகர் ஒரு விரிப்பின் மீதோ பாயின் மீதோ தலைக்கு ஒரு தலையணை வைத்துக்கொண்டு சௌகர்யமாக மல்லாந்து படுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுவார். அதன் பின், ஒரு சாதாரணமான உபதேச பிரார்த்தனையை உச்சரித்துவிட்டு கண்களை மூடிக்கொண்டு, தன்னுடைய சரீரத்தில் ஏற்படும் ஜீவ காந்த அலைகளை உணர்வு மூலம் உன்னிப்பாக, திரையில் ஒரு படக் காட்சியைப் பார்ப்பது போல மனதின் உள்திரையில் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். இதற்காக மனத்தை ஒருமுகப்படுத்த வேண்டுமென்ற பலவந்த முயற்சி தேவையில்லை. இந்த பயிற்சிக்கு தனி வகை ஆசன மேதும் தேவையுமில்லை. மாறாக ஆசனப்பயிற்சி கூடாது என்றே கூறப்பட்டுள்ளது. சில நிமிடங்களுக்குப் பிறகு (30 முதல் 40 நிமிடங்களுக்குப் பிறகு) பக்கத்தில் விரித்திருந்த இரு கைகளும் தாமாகவே மேலேழும்பி மார்பின் மீது நமஸ்கார ரூபத்தில் தாமே வந்தமையும். இரண்டு உள்ளங்கைகளும் ஒன்று சேரும் . பிறகு கண்களைத் திறந்துகொண்டு தனது இயல்பான வேலைகளை கவனிக்க ஆரம்பிக்கலாம். இதோடு பிரார்த்தனை முடியும். இதே போல மறுநாள் முதற்கொண்டு, காலையும் மாலையும் இந்த பிரார்த்தனையை இதே உச்சரிப்போடு செய்து வர வேண்டும். (காலை 6 மணி மாலை 6 மணி) ஒரு குறிப்பேடு (டைரி) வைத்துக்கொண்டு அன்றாட அனுபவங்களையும் நேரத்தையும் குறித்து வரலாம். முதல் பிரார்த்தனைக்கு ஒரு மணி நேரம் கூட ஆகலாம். ஆனால் இரண்டு மூன்று தினங்களில் கால் மணி நேரத்திற்குள் பிரார்த்தனை முடிந்து விடலாம். (துரிதமான தேர்ச்சியை வேண்டுபவர்கள் சுமார் 40 நிமிடங்களோ அல்லது தாமாகவே கைகள் கூம்பி நமஸ்காரம் வரும் வரையிலோ அப்பியாசம் செய்யலாம் என்று பிறகு மாஸ்டரால்

கூறப்பட்டுள்ளது. ஏதும் அவசரமாக கவனிக்க வேண்டிய அத்யாவஸ்ய வேலையிருந்தால் தன் பிரார்த்தனையை மட்டுமே உச்சரித்து விட்டு, பிறகு ஒய்வின் போது கவனிப்பதாக உறுதி எடுத்துக்கொள்ளலாம். பிரார்த்தனையை ஆரம்பிக்கும் முன்னால் ஏதேனும் சொற்ப ஆகாரம் எடுத்துக்கொள்வது நல்லது. பசியோடு இருக்கக்கூடாது. மனம் உற்சாகத்தோடும் அமைதியோடும் இருத்தல் வேண்டும். எந்த அநுஷ்டானங்களும் தேவையில்லை. இந்த பிரார்த்தனையின் மூலம் சரீரத்திலுள்ள எலும்பு, நரம்பு, தசை ஆகிய சகல பாகங்களிலும் மாஸ்டருடைய ஜீவகாந்த சக்தி வேலைசெய்து கேடானவற்றை நீக்கி தூய்மைப்படுத்தி, தேவையான தேர்ச்சியும் வளர்ச்சியும் கொடுத்து வருவதால் தனியான தேகப்பயிற்சி ஏதும் அவசியமில்லை. நீண்ட சைகிள் பிரயாணம். குதிரை சவாரி போன்ற முரட்டு விளையாட்டுக்கள் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். ஏனெனில் இவை மாஸ்டர் சக்தியால் அமைக்கப்படும் நூதன சரீர கட்டுமானத்திற்கு குந்தகம் விளைவிக்கக்கூடும். இந்த யோக சக்தியால் சரீரத்தில் உஷ்ணம் ஏற்படக்கூடுமாதலால் தினசரி கொஞ்சம் நல்லெண்ணையை தலையில் குளியலுக்கு முன் தேய்த்துக்கொள்வது நலம் பயக்கும் என்று கருதப்படுகிறது. உபவாசம் இருந்து சரீரத்தை வருத்துவதோ, மன ஒருமைப்பாடு வேண்டுமென்பதற்காக மனத்தை வீணான உருத்தல், உளைச்சல்களுக்குள்ளாக்குவதோ கண்டிப்பாக தவிர்க்கப்படவேண்டும். உள்ளிருக்கும் மாஸ்டரே மனத்தடுமாற்றம் ஏற்படாமல் இருக்கவும். அமைதியும் உற்சாகமும் இருக்கும்படியும் ஏற்ற சூழ்நிலையை தாமே ஏற்படுத்தித் தருவார். மனம் தடுமாற்றமின்றி ஒழுங்கான பாதையில் இயங்கி வர இதுவே சரியான வழிமுறையாகும். மனோ மய கோசம் என்பது அதாவது பிராணமய கோசத்தைக் காட்டிலும் மிக மென்மையானது. இது ரூப மனம் என்றும் அரூப மனம் என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த இரு

கட்டங்களுக்கிடையே சுமார் 600 குறுக்குப் பாதைகள் உள்ளதாக மாஸ்டர் குறிப்பிட்டுள்ளார் மனத்தை இவற்றுள் எந்த பாதையில் செலுத்துவது, எது ஒழுங்கான பாதை என்று ஒரு சாதகரால் உணர்ந்து கொள்வது கடினமாயிருக்கும். எனவே இப்படிப்பட்ட மனதை ஒரு முகப்படுத்துவதால் மட்டுமே சரியான பாதையில் செலுத்த முடியும் என்று நம்புவதற்கில்லை. எனவே எப்போதும் திறந்த மனத்தோடு இருந்து அதை ஒழுங்குமுறையாக நடத்தும்படி மாஸ்டர் சக்திக்கு முழு நம்பிக்கையோடு விட்டு விடுவதே ஒரு சாதகனின் கடமையாகிறது.

சாதகனின் தேர்ச்சிக்கேற்ப அவ்வப்போது விசேஷ பிரார்த்தனைகள் கொடுக்கப்படும். அவற்றில் சில கோர்வையான வாக்கியங்கள் அமைந்திருக்கும். இதனால் வழக்கமாகச் செய்து வரும் பிரார்த்தனை மாறுபடாது. அந்த வழக்கமான பிரார்த்தனையோடு விசேஷ பிரார்த்தனையிலுள்ள வாக்கியங்களில் தினம் ஒவ்வொன்றாக சேர்த்து காலையும் மாலையும் பிரார்த்தித்து வரவேண்டியதுதான். வாக்கியங்கள் எந்த மொழியாகவும் இருக்கலாம். அவற்றின் சப்தம் - ஓசை தான் முக்கியமாகும்.

மேலே கூறப்பட்டதிலிருந்து இந்த யோகப் பயிற்சிக்கு ஏதும் அநுஷ்டான முறைகள் இல்லை என்பதை தெரிந்து கொள்ளலாம். உலக வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள யாரொருவரும் ஆணும்பெண்ணும் இந்த யோகப்பயிற்சியில் ஈடுபடலாம். இதற்காக இல்வாழ்க்கையை சம்சார வாழ்வையோ சுகத்தையோ துறக்கவேண்டிய அவசியமில்லை. தமது குடும்ப வாழ்வை மேன்மையடையச் செய்து கொள்வதற்குத்தான் இந்த யோகமுறை வகுக்கப்பட்டுள்ளது. மக்கள் பலரும் பல கேடுகள் நிறைந்த நகர்புற வாழ்வை ஒதுக்கிவிட்டு காடு மலை தேடிச் செல்ல வேண்டிய அவசியமில்லை. பல்வேறு கேளிக்கைகள் நிறைந்த நவநாகரிக நகர்புறங்களின் நடுவிலே இருந்து கொண்டும் இந்த

யோகத்தைச் செய்து வரலாம். உடுத்தல், உண்ணல் , உறங்கல் ஆகிய அன்றாட கடமைகளைப் போல் இதையும் ஒரு கடமையாக செய்து வரலாம். இந்த பயிற்சி முறை கற்பதற்கும் செய்து வருவதற்கும் மிக எளிதாக காணப்பட்டாலும், இதிலிருந்து உடனடியாக கிடைக்கும் பயன்களும் இறுதியில் கிடைக்க இருக்கும் சாஸ்வத ஆனந்த சுக வாழ்வும் இதன் மேன்மையையும் மகோன்னதமாட்சிமையையும் விளங்க வைக்கும்.

5. விசேஷ பிரார்த்தனைகள்

இந்த யோகத்தின் ஒரு பகுதி குண்டலினி சம்பந்தப்பட்டதாகும். மற்றொரு பகுதி கிரகங்கள் சம்பந்தப்பட்டதாகும். சூரியனிலிருந்தும் சூர்ய குடும்பத்திலுள்ள மற்ற கிரகங்களிலிருந்தும் வரும் சக்திகளை பூமி கிரகித்து அந்த சக்திகளின் மூலம் பூமியில் விளையும் பொருள்களும் தாவர பண்டங்களும் நமக்குக் கிடைக்கின்றன. ஆகவே அந்த விளை பொருள்களை நாம் உணவாகக் கொள்வதன் மூலமே நமது சரீரமும் கட்டப்படுகிறது. அந்த சக்திகள் மாசற்றும் தூய்மையாகவும் கிடைக்கும் பொருட்டு மாஸ்டர் அவர்கள் கிரகங்களிலிருந்து வரும்சக்திகளை தூய்மையாகவும் சாஸ்வதத்தன்மையை கொடுக்கக்கூடிய தாகவும் இருக்கும்பொருட்டு கிரகங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி கோர்சுகள் - விசேஷ பிரார்த்தனைகள் கொடுத்திருக்கிறார். மாஸ்டருடைய உத்திரவுகள் சப்த அலைகள் மூலம் கிரகங்களுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து நமக்குத் தேவையான சக்திகள் பௌதிக சக்தியாக நமது சரீரத்தை வந்தடைகின்றன. மாஸ்டர் அவர்கள் இந்த வேலையைப் பற்றித் தெரிவிக்கும் போது "நான் தொலைபேசியின் மூலம் வேலை செய்கிறேன். கிரகங்கள் எனக்கு தந்தி மூலம் சக்தி அலைகளாக வேண்டிய கட்டுமான சக்திகளை அனுப்புகின்றன" என்று தெரிவித்துள்ளார். இந்த கிரக

ரெகுலேஷன்கள் ஆயிரக்கணக்கான வாக்கியங்களை கொண்டிருப்பதாலும், அவைகள் ஒரு முறை சாதகர்களால் செய்யப்பட்டு விட்டதாலும், புதிதாக சேர்க்கப்படும் சாதகர்கள் அந்த அப்பியாசங்களை மீண்டும் செய்யத் தேவையில்லை. ஆனால் குண்டலினியின் இரகசியங்களைக் காட்டிக்கொடுத்து, அதனுடைய கட்டுமான வேலைகளையும் நடத்தி வைக்கக்கூடிய மற்ற கோர்சுகளை நாம் அப்யசித்தே ஆக வேண்டும். ஏனெனில் அந்த அப்பியாசங்கள் மாஸ்டருடைய சங்கல்பத்தை நமது லிங்க சரீரத்திற்குள் - ஈதரிக் சரீரத்திற்குள் பதியவைத்து (லிங்க சரீரம் - ஈதரிக் பாடி) அந்த லிங்க சரீரத்தை துளைத்து (போர் செய்து) அதனுள் அளவற்ற பிராண சக்தி அல்லது ஆனந்த உயிரைப் புகுத்தி, சாஸ்வத தன்மையை அந்த சரீரத்திற்கு உண்டாக்கிக்கொடுக்க குண்டலினி சம்பந்தப்பட்ட அந்த கோர்ஸ்கள் உபயோகமாயிருக்கின்றன. அதன் பிறகு பிராண சக்தியில் உயிரின் பரிமாணத்தில் குறை ஏற்படாது. தற்போதுள்ள நிலையில் பிறவியின் போது காலவரம்புக்குட்பட்ட பிராண சக்தியே கொடுக்கப்பட்டு வருகிறது. இது இருதய பாகத்தில் ஜீவாத்மாவாக இருந்து கொண்டு, தனது சக்தி அலைகளை உடல்பூராவும் பரப்பி சரீரத்தை இயக்கிவருகிறது. இந்த வேலையை உஸ்வாசத்தின் மூலமே நடத்தி வருகிறது. குண்டலினியானது முதுகெலும்பின் அடிப்பாகத்தில் ஆசன வாயின் அருகில் அழிவற்ற பரமாணுவாய் இருந்து கொண்டு நிஸ்வாசத்தை நடத்தி வருகிறது. உஸ்வாச நிஸ்வாசம் என்கிற சுவாச வேலை ஹிருதய ஸ்தானத்திலுள்ள ஜீவாத்மாவின் - ஸ்டெபிலிடியின் அலைகள் குண்டலினியை நோக்கி கீழே அனுப்பு வதும், கீழே உள்ள குண்டலினி அந்த கீழ் நோக்கி வரும் அலைகளை மேல் நோக்கி திருப்பிவிடுதலுமே உஸ்வாச நிஸ்வாசமாக இந்தமனித சரீரத்தில் இயங்கி வருகிறது. இந்த நேர்முகத் திசையின் எதிர் முக தாக்குதலால் ஒருவகை அழுத்தம்

ஏற்பட்டு பக்கவாட்டில் சுற்று வட்டமாக வியாபித்து இதன் மூலம் லிங்க கோசம்- (ஈதரிக் பாடி) உண்டாக்கப்படுகிறது. ஜீவாத்மாவால் தனது அழுத்தத்தின் மூலம் இந்த லிங்க கோசத்தை துளைத்துக்கொண்டு வெளியே வர முடிவதில்லை. அதேபோல் வெளியில் வியாபித்திருக்கும் பிராண சமுத்திரத்தின் அழுத்த அலைகளும் இந்த லிங்க சோகத்தை துளைத்துக்கொண்டு சரீரத்தின் உள்ளே புக முடியவில்லை. உள்ளுக்கும் வெளிக்கும் தடையாயிருந்து வரும் இந்த லிங்ககோசம் மரணத்தின் போதுதான் அதாவது உஸ்வாசம் நிற்கும்போது தான். இந்த லிங்க கோசம் சிறிது சிறிதாக கரைந்து மறைகிறது. ஒரு சுவரின் கற்களை எப்படி சிமெண்ட் கலவையானது பிரியாமல் இணைத்து வைத்திருக்கிறதோ அது போன்றே இந்த லிங்க கோசமானது சரீர பௌதீக அணுக்களை பிணைத்து வைத்திருக்கிறது. இந்த ஈதர் கோசம் பிரிந்து விட்டால் சரீரத்தின் கட்டுமானம் குலைந்து சிதறிப்போகும். குண்டலினி பயிற்சிகள் மூலம் பிராண சக்தி இந்த ஈதர் கவசத்தை துளைத்துக்கொண்டு ஊடுருவிச்சென்று வேலை செய்வதற்காகவே கொடுபட்டிருக்கிறது. இதனால் லிங்ககோசம் கெட்டிப்படுத்தப்பட்டு கரைந்து போகாமல் காக்கப்படுகிறது.

நவீன விஞ்ஞான முறைப்படி வாயுரூபமான ஈதர், காந்த அலை, மின்சார அலை , ஒளி அலை இவை பரவுதற்கான ஊடு பொருளாக கருதப்பட்டு வருகிறது. ஆனால் சப்த அலைகளால் இந்த ஈதர் மூலம் ஊடுருவ முடிவதில்லை. இதற்கான காரணமும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஈதரைப் பற்றி மாஸ்டர் தெரிவித்துள்ள விளக்கம் இதற்கு விடையளிப்பதாக இருக்கிறது. பிராண சக்தி எங்கெங்கும் பரந்து இடைவிடாது நிறைந்திருப்பதோடு எப்போதும் அசைந்து கொண்டே இருக்கிறது. இதனால் இதன் அழுத்தமும் எங்கும் பரவி நிறைந்திருக்கிறது. ஈதர் என்பதே மெய்ப் பொருள் அல்லது உண்மையின் இயக்கம்தான், மாஸ்டரின் அகராதியின் படி

உண்மையே உயிர். உயிர் முடியும் இடத்தில் சப்தம் ஆரம்பமாகிறது. உயிர் சக்தி மாற்றம் பெரும் முதற்கட்டம் சப்தம் தான். பிராண சக்தி ஈதருக்குள் ஊடுருவிச் செல்ல முடியாது. அதேபோல் சப்தமும் ஈதருக்குள் ஊடுருவிச் செல்ல முடியாது. ஒரு மனிதன் தான் உச்சரிக்கும் சப்தத்தை கொஞ்சம் கொஞ்சமாக மென்மையாக்கிக் கொண்டே போய் முடிவில் காதால் அடியோடு கேட்க முடியாமற்போன நிலை அடையும்போது ஒரு வேளை சப்தத்தின் முடிவான எல்லையைத் தொடும் தருணத்தில் அந்த உயிர் சக்தியின் ஆரம்பத்தைக் கண்டு கொள்ளலாம் போலும்.

6. செயல்முறைகள்

இந்த யோகப்பயிற்சிக் கூடம் எளிமையானதுதான். ஆனால் விசாலமானது. இது தென்னிந்தியாவில் பிரசித்தியோடு விளங்கிவரும் கும்பகோணத்தில் காவேரியாற்றின் அருகாமையில் அமைந்துள்ளது. சாதகர்கள் இங்கு அடிக்கடியும் தொடர்ந்தும் கூடி அப்யசித்து வருகிறார்கள். வருடத்திற்கு குறைந்தது 2 முறையாவது அதாவது மே, ஜுன் மாதங்களில் ஒரு முறையும், டிசம்பர் மாதத்தில் ஒரு முறையும் பெருங்கூட்டங்கள் நடைபெறுகின்றன. இந்த சமயங்களில் விளக்க உரைகளும் கலந்துரையாடல்களும் நடைபெறுவதோடு நடைபெற்று முடிந்த பயிற்சிகளையொட்டிய அனுபவங்கள் பகிர்ந்து கொள்ளப்படு வதோடு எதிர்கால திட்டங்களும் வகுத்துத் தரப்படுகின்றன. சாதகர்கள் மட்டுமன்றி அனுதாபிகளும் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். சாதகர்களுக்கு புது பிரார்த்தனைகளும் கொடுக்கபபடும். மேலும் கூட்டுப் பிரார்த்தனை காலங்களில் அபரிமிதமாக சக்திப் பிரவாகம்தெளிவாக உணரப்படுவதோடு அதற்கேற்ப உற்சாகமும் பெருகும்.

சிகிச்சை அளிக்க அனுமதிக்கப்பட்ட மித்திரர்கள் நோய்வாய்ப் பட்டுள்ள மக்களுக்கு இலவசமாக சிகிச்சையளித்து

தொண்டு புரிய வேண்டும். கர்ம விதிப்படி ஆயுள் குறைவில்லாமல் இருந்தால், எந்த நாள்பட்ட வியாதியும், கொடிய விஷமும் கூட இந்த யோக சிகிச்சைக்கு கட்டுப்படும். இதற்கேதும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. நோயாளியின் இடத்திற்குச் சென்று சிகிச்சையளிக்கும் சாதகர் ஏழையாயிருந்தால் நோயாளியிடமிருந்து தனது போக்குவரத்து சிலவு மட்டும் பெற்றுக்கொள்ளலாம். சிற்றுண்டிக்கு சொற்ப தொகையும் பெற்றுக்கொள்ளலாம். ஏனெனில் வெறும் வயிற்றோடு சிகிச்சை அளிக்கக்கூடாது என்பது விதிமுறை. யோக சிகிச்சை மூலம் இருமல், ஆஸ்த்மா, சர்ம வியாதிகள், மலேரியா ஜுரம் ஆகிய பல வியாதிகள் இந்த யோக சிகிச்சை மூலம் குணப்படுத்தப்பட்டுள்ளன. சிறு நீரகத்தில் கல்லடைப்பு, பைகாச சேஷ்டைகள் மனோ வியாதி முதலியவைகளுக்குக்கூட சிகிச்சையளிக்கப்பட்டு குணமாகியிருக் கின்றன. (மாஸ்டர் இருந்த காலத்தில் சிகிச்சை அளிக்கும் மித்திரர் யோகாஸ் கூலில் எப்போதும் அங்கேயே தங்கியிருந்து சிகிச்சை யளித்து வந்துள்ளதாக அறிகின்றோம்).

இதிலிருந்து இந்த யோகாலயம் ஒரு ஆன்மீக தொண்டாற்றும் தர்ம ஸ்தாபனம் என்பதை உணர்ந்து கொள்ளலாம். இதில் யோகா ஸ்கூல் என்பது யோகப்பயிற்சி அளிக்கும் இடம் என்பதையும், மித்திரர் (ப்ரெண்ட்) என்பது பயிற்சி பெரும் சாதகர்கள் எல்லோரும் சமத்துவமாக நட்போடு மித்திரத்துவத்தோடு மற்றவரோடு பழக வேண்டும் என்பதையும் குறிக்கும். எனவே தான் யோகாலய மித்திரசங்கம் என்ற பெயர் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த யோகத்தில் முக்கியமாக கவனத்திற்கு கொள்ளப்பட வேண்டியது ஆன்மா அல்லது உயிராகும். கிரியா சக்தியாகும். க்ரியைக்கு அடிப்படையாயிருப்பது காதல் அல்லது அன்பு. இந்த க்ரியா சக்தி சிவமும் சக்தியும், புருஷாவும் ப்ரக்ருதியும் ஒன்று

கலப்பதாலேயே உண்டாகிறது. ஆணும் பெண்ணும் ஒன்று கூடுவதன் மூலம் கலவி மூலமே க்ரியை அதாவது வம்சவிருத்தி ஏற்படுகிறது. மாஸ்டர் அவர்கள் கடவுள் என்றால் என்ன? என்று கேள்வி கேட்டு விடையாக கடவுள்தான் உண்மை என்று சொல்லி மேலும் உண்மை என்றால் என்ன? என்று கேட்டு அதற்குப்பதில் உண்மையே உயிர் என்றும் உயிர் என்றால் என்ன? என்று மேலும் வினவும் போது உயிரே அன்பாகும் என்றும் பதில் கூறியிருக்கிறார். ருஷிய அறிஞர் டால்ஸ்டாய் அவர்களும் "அன்பு எங்கு உள்ளதோ அங்கு கடவுள் இருக்கிறார். ஏனெனில் கடவுளே அன்பாகும்" என்று கூறியுள்ளார். கிறிஸ்து மதத்தில் கூட "கடவுளே பரமபிதா மனிதர் யாவரும்அவரின் மக்களே. அதனால் எல்லோருமே சகோதரர்களாக கருதப்பட்டு உலகில் சகோதரத்துவம் மலர வேண்டும்" என்று கூறப்பட்டு வருகிறது. மற்ற சமயங்களும் கடவுளை - இறைவனை தந்தையாகவே பாவிக்கின்றன. எனவே இவையாவும் மாஸ்டர் கருத்துக்கு ஒத்திருப்பதைக் காணலாம். எனினும் மாஸ்டர் அவர்கள் ஏனோ சகோதரத்துவத்திற்கு மாறாக மித்திரத்துவத்தையே மேலாக போற்றியுள்ளார்.

ஆண், பெண் கலவி உறவு பெரும்பாலும் ஒரு மயக்க நிலையிலேயே ஏற்படுவதாக உள்ளது. சகோதரத்துவம் என்பது அன்பையேதான் குறிக்கிறது. என்றாலும் மித்திரத்துவம் என்பது அதைவிட சிறப்பானதாகும். ஏனெனில் மித்திரத்துவம் என்பது மயக்க மில்லாத விழிப்பு நிலையில் மட்டுமே ஏற்படக்கூடியதாகும். மித்திரன் என்ற பதத்தில் ஒரு ஆழ்ந்த கருத்தும் அடங்கியிருக்கிறது. மனிதனுடைய அமைப்பு ஏழு கோசங்களைக்கொண்டு அமைந்துள்ளது. கண்ணுக்குப் புலப்படும் ஸ்தூலசரீரமும் அந்த ஏழில் ஒன்று தான். இந்த ஸ்தூல சரீரத்தில், ஆஸ்ட்ரல் சரீரம் அதாவது கண்ணுக்கு புலப்படாத சூக்ஷம சரீரம் இருக்கிறது. மரணம் அடைந்த உடன் ஒருவன் இந்த

சூக்ஷம சரீரத்தையே அடைகிறான். இந்த சூக்ஷம சரீரத்தின் மூலம் ஸ்தூல சரீரத்திற்குத் தேவையான பிராண சக்தி இந்த சூக்ஷமத்தின் மூலமே பிராண அலைகளாக, மேல்நிலைகளிலிருந்து கீழ் நிலையை வந்தடைகிறது. மனிதன் விரும்பும் ஸ்தூல சாஸ்வதத்தையே இந்த சூசஷம சரீரம் குறிக்கிறது. இதனால்தான் முதுமை வந்து கஷ்டப்படும் போதும். நோயால் துன்புறும்போதும் கூட பூலோக வாழ்வின் பிடிப்பிலிருந்து விடுபட்டுப்போக ஒருவன் கஷ்டப்படுகிறான். எனவே தான் மாஸ்டர். அவர்கள் உயிர் பற்றியும் அதன் இழப்பு நிலையாகிய மரணம் பற்றியும் ஆராய்ச்சி செய்ய முற்பட்டார். சிலர் மற்ற ஆவிகளை கோயில்களிலும், ஆவி சம்பந்தமான பயிற்சிக் கூடங்களிலும் மற்றவர்களின்ஆவிகளை கடவுளாகவும், வழி காட்டிகளாகவும் கருதி தொழுது வருவதுபோல் அல்லாமல் தனது சூசஷம ஆவியையே மாஸ்டர் தனது குருவாக ஏற்றுக்கொண்டார். தன்னுடைய குறிக்கோளாகிய ஸ்தூல சாஸ்வதம் என்பது சூசஷம ஆவியின் குறிக்கோளாகவே இருந்ததால், இரண்டும் ஒன்று பட்டிருந்ததால் அந்த ஆவியும் சுலபத்தில் ஒப்புக்கொண்டு மாஸ்டருடைய கேள்விகளுக்கு விடையளித்ததோடு சந்தேகங்களை நிவர்த்தி செய்தும்,கோரிக்கைகளை நிறைவேற்றியும், ஆசைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்தும் உதவியது. மேலும் சாஸ்வதம் அழியாமை என்ற கருத்தை ஸ்தூலசரீரம் முழுமையும் பரவும்படியும் உதவி செய்தது. சிருஷ்டி கர்த்தா அல்லது ஆரிஜனின் பிரம்மத்தின் சங்கல்பமும் இதுவே யானதால் இந்த வேலை ஒன்றுக்கொன்று ஒத்து கூடுதலான வலுவோடு நடைபெற்றது. நாளடைவில் மாஸ்டருக்கு குருவாயமைந்த ஆவிக்கு மாஸ்டருடைய உள்ளார்ந்த குறிக்கோளானது முழுமையாகப் புலப்பட்டதும் நம்மில் யார் பெரியது - நீயா (ஸ்தூலமாக மாறியிருக்கும் மாஸ்டரா) அல்லது தற்போது குருவாயிருக்கும் ஆவியா

(ஆஸ்ட்ரலா) யிருக்கும் நானா என்ற கேள்வி ஏற்பட்டது. ஆவி மாஸ்டருக்கே அந்தபெருமையை கொடுக்கத் தயாராய் இருந்த நிலையிலும் மாஸ்டர் தனக்கே இயல்பான பெருந்தன்மையோடு '' நீயும் பெரிதல்ல நானும் பெரிதல்ல , நாம் ஒன்று பட்டுள்ள நிலையே பெரிது; அதாவது நாமே- நீயுமல்ல - நானுமில்லை- இரண்டும் ஒன்றுபட்டு சம நிலையாகிய "நாம்" என்பதே பெரிது'' என்று முடிவெடுத்தார்.

இந்த நாம் அதாவது நாம் எல்லோருமே சமம் என்பதுதான் நமது யோகத்தின் தலையாய கருத்தாகும். மாஸ்டரின் குறிப்பெழுத்தாகிய சி.வி.வி. என்ற மூன்று அக்ஷரங்கள் மூன்றும் சி.வி.வி. என்ற மூன்று ''சப்தங்களையே'', See WE WE நாம் நம்மையே நமக்குள்ளாக பார்ப்போம்'' என்ற அர்த்தத்தையே கொடுக்கிறது. மேலே சொல்லப்பட்ட ப்ரெண்ட் மித்திரன்- மித்திரத்துவம் என்பது இந்த நாம் என்பதை ''நாம் எல்லோரும் ஒன்றே - எல்லோரும் மித்திரர்களே'' என்பதையே வலியுறுத்துகிறது. இரண்டு நண்பர்களிடத்து எப்போதும் சமத்துவமே, ஒருத்தருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஒத்துப்போகும் மனப்பான்மையே இருந்து வரும். இந்த கருத்தை ஒட்டியே மாஸ்டர் தன் சீடனை தூய்மையாக்கி தேர்ச்சியளித்து பலவான யோகப்பயிற்சிகள் மூலம் முழுமை பெறச் செய்து தனக்கு சமமாக்கிக்கொள்கிறார். ஆகவே ஒவ்வொரு மனிதனும் முதலில் மீடியமாக - சீடனாக ஏற்கப்பட்டு முடிவில் தேர்ச்சி பெற்று மாஸ்டருக்கு சரி சமமான நிலை எய்தி பின்பு சீடராகிய அவரே மாஸ்டராகிறார்.

சி.வி.வி. அவர்கள் எப்படி மாஸ்டர் சி.வி.வி ஆனார் என்பது மேற்படி விளக்கங்களால் ஓரளவுக்கு புரிந்திருக்கும். யோகப்பயிற்சி நிலையம் (யோகாஸ்கூல்) என்ற ஒரு ஆன்மீக தர்ம ஸ்தாபனத்தை மித்திர சங்கம் என்ற பேரால் துவக்கிநடத்தி வருகிறார் என்பதால் மட்டுமே அவர் மாஸ்டராக

கருதப்படவில்லை. இந்த பிரபஞ்ச பரிணாம வளர்ச்சியிலேயே ஸ்தூல சாஸ்வதம் என்ற தத்துவத்தை முதன் முதலாகப் புகுத்தி நடைமுறையில் கொண்டு வருவதற்காக ஒரு பயிற்சிக் கூடத்தை துவக்கி நடத்தி வருவதற்காகத்தான் என்றும் கொள்ளலாம். இந்த யோகத்தின் மூலம் பெறக்கூடிய ஆறு சாதனை களை வெளியிட்டு அவற்றை அடைவதற்கான பலவான யோக பயிற்சி முறைகளை நடைமுறைப்படுத்திஅவற்றை நிறைவேற்றி வைப்பத்தில் ஏற்பட்ட எத்தனையோ கஷ்ட நஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் உறுதியோடும் சோர்வின்றியும் நடத்தி, அதனால் பெற்றுள்ள நன்மைகளும் முன்னேற்றங்களுமே இந்த யோக பயிற்சிக் கூடத்தின் சரித்திரமாகும். இவை யாவற்றையும் இந்த 30 ஆண்டுகால சாதனைகளையும் வேதனைகளையும் முழு அளவுக்கு இந்த சிறு வெளியீட்டில் வெளியிடுவது இயலாத காரணத்தால் இதோடு முடிக்கப்படுகிறது.

7. இலக்கியம்

சமஸ்கிருத சொல்லாகிய யோகா என்பதற்கு பல அர்த்தங்கள் கொள்ளலாம். இதன் நேர்பொருள், ஒன்றாகப் பிணைத்தல்- இரண்டு பொருள்கள் ஒன்றாக இணைதல் என்றே பொருள்படும். சிறப்பாக இறைவனோடு ஒன்றியிருத்தல் என்ற தன்மைக்கும் இது கையாளப்படுகிறது. யோகம் என்பதை விஞ்ஞான சாஸ்திரமாகக் கொண்டு சமஸ்கிருதத்தில் பல நூல்கள் வெளியாகியுள்ளன. உபநிஷதங்கள், பகவத்கீதை, தந்த்ர சாஸ்திரங்கள், பதஞ்சலி யோக சூத்திரங்கள் இவையாவும் யோக சாஸ்திரங்களே. இவை யாவும் இதர மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு வெளியாகியுள்ளன. தமிழ் மொழியிலும் இம்மாதிரி பல யோக நூல்கள் வெளி வந்துள்ளன. சித்தர்களின் நூல்களும் யோகம் சார்ந்தனவே. இந்த யோக நுணுக்கங்களை சுலபமாகத் தெரிந்து கொள்ள பல விளக்க நூல்களும் வெளி வந்துள்ளன. ஆனாலும் கூட யோகப் பயிற்சி என்பது பரந்தும்

விரிந்தும் இந்தியாவில் கூட பிலபலமாக காணப்படவில்லை. மற்ற நாடுகளில் பெரும்பாலும் இல்லை என்றே கூறிவிடலாம். யோகத்தைப் பற்றி இந்த நூல்களில் கூறப்பட்டிருக்கும் பலவகையான விளக்கங்கள் சாதாரண மக்களுக்கு பாமரர்களுக்கு குழப்பத்தை தருவதாகவே அமைந்துள்ளன. யோகம் - என்பது சமாதி என்கிறது ஒரு சூத்திரம். இது ஸ்தூல சரீர உணர்வு தவிர்த்த மன உணர்வு மட்டுமல்ல. ஒரு வித மயக்க நிலையாகும். இம்மாதிரியான மனோநிலையிலிருந்து பெறும் அனுபவங்களை மூளையில் பதிந்துகொண்டு பிறகு ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டுமென்றால் இதற்கு சிறப்பான ஆத்மீக பயிற்சி வேண்டும். இந்த எல்லை கடந்த அறிவாற்றல் ஒருத்தருக்கொருத்தர் அனுபவங்களில் மாறுபடும். மேலும் விஞ்ஞான ஆராய்ச்சிக்கு ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு முழுமையான தெளிவுடனும் அமைந்திருக்காது.

யோகம் என்பது நடுநிலை அமைதி என்று பகவக்கீதை கூறுகிறது. இது சமத்துவா என்று சமஸ்க்கிருதத்தில் கூறப்படும் மனோ அமைதி நிலையையே குறிக்கும். விருப்பு வெறுப்பு , சுகம் துக்கம் ஆகிய நிலைகளில் மனம் தடுமாறாமல், தத்தளிக்காமல் நிலையாக நடுநிலையில் சமநிலையிலிருத்தல் என்பதே இதன் பொருள். பகவான் கிருஷ்ணரின் இந்த சூத்ரம் யோகம் என்பதன் நேரான உண்மையான அர்த்தத்தை வெளியிடுவதாக இருப்பினும் பாமர மக்களால் இதை அனுபவ பூர்வமாகக் காண்பது கடினமாகும். எனவே அவர்களுக்கு உபயோகப்படாததாகும்.

இதோடு சாங்கிய சித்தாந்திகளுக்கும் வேதாந்திகளுக்கும் இருந்து வரும் வேறுபாடுகளும் யோகத்தில் ஈடுபடுபவர்களுக்கு குழப்பத்தை விளைவிப்பதாயுள்ளது. இந்த பிரபஞ்சம் ஒரே ஒரு மூலப்பொருளிலிருந்தே தோன்றுகிறது. அப்பொருள் அறிவு சொரூபமானது என்கிறது வேதாந்தம். சாங்கியமோ பிரபஞ்சம், நிலை பேருடைய அறிவாகிய ஆன்மாவும் மாறுபாட்டுக்கு

உட்பட்ட பௌதீகப் பொருளும் இரண்டும் சேர்ந்தே தோன்றுகிறது என்று கூறுகிறது. எல்லாம் சிவமயம், ஆன்ம மயம், அறிவு மயம் என்கிறது வேதாந்தம். சாங்கியமோ ஆன்மாவும் ஜடப் பொருளும் சேர்ந்தே பிரபஞ்சம் தோன்றியிருக்கிறது என்கிறது, இதுவே குழப்பத்திற்குக் காரணம்.

இதனால் தான் மாஸ்டர் அவர்கள் நமக்கெல்லாம் இந்த தத்துவ ஆராய்ச்சிகள் தேவையில்லை. இவற்றைப் படித்து உங்கள் மனதைக்குழப்பிக் கொள்ள வேண்டாம் என்று எச்சரித்துள்ளார். படிப்பில்லாத பாமரனையும் தானே உள்ளிருந்து தேர்ச்சியளித்து பூர்ண ஞானத்தையும் முழுமைப் பேற்றையும் அளிப்பதாக உறுதியளித்துள்ளார். ஆனாலும் ஆர்வமுள்ள சாதகர்களுக்கு உடலமைப்பு குறித்த நூல்களையும், அன்னி பெசன்ட் அவர்கள் எழுதியுள்ள பெடிகிரி அப் மேன் (மனிதனின் தோற்றம்) என்ற நூலையும் படிக்கும்படி கூறியுள்ளார். மாஸ்டர் அவர்களின் சொற்பொழிவுகளும் கேள்விகள் சம்மந்தமான விளக்க உரைகளும் திரு. என். ஆர். பி.வி அவர்களிடத்திலும் மற்றும் சில மித்திரர்களிடத்தும் குறிப்பேடுகளில் எழுத்து ரூபமாக இருந்து வருகின்றன. இவற்றில் மிக முக்கியமான 'டி' கோர்ஸ் விளக்கம் மட்டும் புத்தகமாக பிரசுரமாகியிருக்கிறது. இந்த சிறு நூலை எழுதியிருப்பவர் "குண்டலினி அல்லது உலகளாவிய பேரன்பு" என்ற மற்றொரு நூலையும் நாடக வடிவில் எழுதியுள்ளார்கள். இதில் எளிய முறையில் மாஸ்டருடைய கருத்துக்கள் , யோக பயிற்சி முறைகள் , மெமரி – மெமோரண்டம், காஷியஸ் பிகர் , குண்டலினி, ஸ்டெபிலிடி ஈதர், ஸ்பேஸ் ஆகிய வார்த்தைகளின் விளக்கங்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் தெளிவு படுத்தப்பட்டுள்ளன. தீக்ஷை பெற விரும்புபவர்களுக்கு இந்த யோகத்தைப் பற்றி ஓரளவுக்கு முன் கூட்டியே தெரிந்து கொள்ளும் முறையில் இது எழுதப்பட்டுள்ளது. சொற்ப விலை ரூபாய் 2 வீதம் யோகாஸ் கூல் சிலவுக்காக என்.ஆர்.பி.வி.

அவர்களிடம் இப்புத்தகங்கள் ஒப்படைக்கப்படுகிறது. புத்தகம் வேண்டுவோர் திரு. டி.எஸ்.இராமானுஜம் அவர்கள் விலாசத்திற்கும் எழுதி பெற்றுக் கொள்ளலாம். (இது தற்போது அச்சில் இல்லை) திரு. பி. நரசிம்ம பந்துலு அவர்களும் "கீதா ஒரு ஆராய்ச்சி" என்ற நூலை வெளியிட்டுள்ளார். இதில் மாஸ்டருடைய கொள்கைகளின் அடிப்படையில் கீதாவாக்கியங்களுக்கு விளக்கம் தரப்பட்டுள்ளது.

திரு. என்.ஆர். பி. வி. அவர்களிடம் புஜண்டர் நாடி என்கிற நாடி கிரந்தமும் இருக்கிறது. இதில் தென்னிந்திய மக்களின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கியுள்ளன. இதைப்படித்து அதில் வரும் வருமானமும் யோகா ஸ்கூல் நடப்புக்கே சிலவாக்கப்படுகிறது. இந்த நூலில் மாஸ்டரைப்பற்றி கூறப்பட்டுள்ள விளக்கங்கள் அவருடைய அதி ஆத்மிகப் பெருமையை சிறப்பாக தெரிவிப்பதோடு மாஸ்டர் மறைந்துள்ள தற்காலத்தில் அவருடைய சீடர்களுக்கு நல்ல வழி காட்டியாகவும் அமைந்துள்ளது. மேலும் பிரபஞ்ச சிருஷ்டி பற்றியும் இதில் விளக்கப்பட்டுள்ளது.

8. சொத்து

மாஸ்டர் சி.வி.வி அவர்கள் இந்த யோகத்தை ஆரம்பித்தபோது அதாவது 1910 ம் வருடத்தில் பெரிய தன வந்தராயிருந்தார். அவர் 1922 வரை இந்த யோகாஸ்கூலை நடத்தி வந்தார். அதுசமயம் உயர் நீதி மன்ற நீதிபதி, மாகாண கணக்காயர் (அக்கவுன்டெண்ட் ஜனரல்) கல்லூரி தத்துவ ஞான பேராசிரியர் என்று பிரசித்தி பெற்ற கனவான்கள் மாஸ்டரின் சீடர்களாய் இருந்திருக்கிறார்கள். எல்லோருக்குமே உபசாரம் செய்வதிலும் உபகாரம் செய்வதிலும் பலவாறாக செலவு செய்து சில சமயங்களில் பண நெருக்கடிகளுக்கும் உள்ளாகியிருக்கிறார். பூமியின் மையப்புள்ளியை நிலைப்படுத்துவதற்காக 1922 மே

மாதம் 12 ம் நாள் மாஸ்டர் அவர்கள் பூலோகத்திலிருந்து மறைந்த பிறகு, மாஸ்டருடைய குடும்பத்தினர் அன்றாட தேவைகளுக்குக்கூட பெரிதும் கஷ்டத்திற்குள்ளானார்கள். இதன் காரணமாக ஸ்தூல சாஸ்வதமும், சுகானந்த பேரின்பமும் அடைவதற்கான யோக பயிற்சிகள் வகுக்கப்பட்டு செயலாற்றப்பட்டு வந்த மாண்புமிக்க யோகாஸ்கூல் ஒரு உணவு விடுதியின் சொந்தக்காரருக்கு வாடகைக்கு விடப்பட்டது. அவரது சீடர் திரு. என் ஆர்.பி.வி. அவர்கள் மற்றும் சில மித்திரர்களோடு சேர்ந்து அவ்வப்போது கிடைக்கும் இதர கட்டிடங்களில் வருடாந்திர கூட்டங்களைத் தொடர்ந்து நடத்தி வந்தார். மாஸ்டருடைய தீடீர் மறைவால் ஏமாற்றத்திற்கு உள்ளான மித்திரர்களுக்கு திரு. என். ஆர்.பி.வி. அவர்கள் கொடுத்த அறிவு பூர்வமான காரண காரிய விளக்கங்கள் மனத் தெளிவையும் உற்சாகத்தையும் அளித்தன. அவர் சென்னைக்கும் இன்னும் மித்திரர்கள் அதிகமாக வசித்து வந்த மற்ற இடங்களுக்கும் அடிக்கடி சென்று ஊக்கமும் உற்சாகமும் அளித்து வந்தார். நாளடைவில் தீசைஷ முறையில் அடங்கிய இரகசியங்களை உணரப்பெற்று புது மீடியம்களை யோகத்தில் சேர்க்க ஆரம்பித்தார். தன்னளவில் பரம ஏழையாக இருந்தும் கூட கொஞ்சம் கொஞ்சமாக பணம்சேர்த்து அதைக்கொண்டு 1936 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் யோகாஸ்கூல் கட்டிடத்தை கிரயமாக வாங்கினார். அந்த கட்டிடத்தை சீரமைத்து புதுப்பித்து நல்ல முறையில் யோக பயிற்சிக்காக மித்திர சங்கத்திற்கு சமர்ப்பணம் செய்தார். அதிலிருந்து மீடியம்கள் அங்கு முன்போல் கூடி அப்யசித்து வருகிறார்கள். வெகு காலத்திற்கும் பிறகு பழைய இடத்தில் கூடிப் பிரார்த்திக்க வசதி ஏற்பட்டதானது எல்லோருக்கும் பெருத்த மகிழ்ச்சி கொடுத்ததோடு அந்த உற்சாகத்தோடு வழக்கம்போல் பிரார்த்தனையில் ஈடுபட்டு வந்தனர். திரு. என். ஆர்.பி.வி. அவர்கள் இந்த கட்டிடத்தை

வாங்குவதற்கும் சீரமைப்பதற்கும் மேலும் வருடாந்திர கூட்டங்களை நடத்தி ஏழை மித்திரர்களுக்கு இலவசமாக உணவு வசதி செய்து கொடுத்த வகையிலும் கடன் வாங்க வேண்டியிருந்தது. தீசைஷயின் மூலம் வசூலாகும் பணம், இதர மித்திரர்களிடமிருந்து நன்கொடையாகப் பெரும் பணம், நாடி மூலம் சோதிடம் சொல்வதற்கு வசூலிக்கப்படும் பணம் இவை யாவற்றையும் யோகாஸ்கூல் சிலவுக்கே பயன்படுத்தி வந்தார். சில மித்திரர்கள் யோகாஸ்கூலிலேயே தங்கி சிகிச்சை முதலிய தொண்டு செய்து வருகிறார்கள். அவர்களுக்கும் தேவையான உதவி செய்ய வேண்டியுள்ளது. மாஸ்டருடைய குடும்பமும் ஏழ்மையடைந்து விட்டதால் அவர்களுக்கும் உதவ வேண்டியுள்ளது. யோகா ஸ்கூலையும் பெருகி வரும் மித்திரர்களின் வசதிக்காக விரிவுபடுத்த வேண்டியுள்ளது. பூர்த்தி காலம் நெருங்கிக் கொண்டு வருவ தொட்டி மித்திரர்களின் கூட்டமும் பெருகிக் கொண்டே வருகிறது. குறிப்பேடுகளில் வரையப்பட்டுள்ள மாஸ்டருடைய விளக்க உரைகளும் குறிப்புகளும் அச்சடிக்கப்பட்டு மித்திரர்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டியுள்ளது. சாஸ்வத ஸ்தூல வாழ்வு என்ற மாஸ்டர் குறிக்கோளை ஏற்றுக்கொள்ளவும், அதற்கு உலக மக்களைத் தயார் படுத்தவும் அதற்கான எதிர்பார்ப்பையும் ஆர்வத்தையும் உண்டாக்குவதற்கும் இந்தப் பிரசுரங்கள் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டியுள்ளது. உலகத்தின் நான்கு திக்குகளுக்கும் சென்று இந்த யோகத்தைப் பிரசாரம் செய்யவேண்டிய காலம் வரும் என்று புஜண்டார் நாடி கூறியிருக்கிறது. இதற்கெல்லாம் குறைந்த பட்சம் ரூ.5000 ஆண்டொன்றுக்கு தேவைப்படலாம். எனவே மீடியம்களும் அநுதாபிகளும் திரு. என்.ஆர்.பி.வி. அவர்களுக்கு தமது நன்கொடைகளை அனுப்பி இந்த புனிதமான தொண்டு தொடர்ந்து நடைபெற்று வர உதவும்படி

கேட்டுக்கொள்ளப்படுகிறது. விரைவில் மாஸ்டரே ஸ்தூலத்தில் திரும்பி வந்து இந்த வேலையை தாமே ஏற்கும் வரையில் நாம் நம்பிக்கையோடு தொண்டாற்றி அப்யசித்து வருவோமாக. இந்த சிறு நூலின் ஆசிரியர் புகழ் பாடும் வழக்கம் இல்லாதவர். ஆனால் இந்த நூலைப் படித்துப் பார்த்து உள்ளத்தால் ஈர்க்கப்பட்டு இந்த புனிதமான சிறப்பான வேலை நடந்து வர நன்கொடையளிக்கும் தன வந்தர்கள், ஜமீன்தாரர்கள், அரசர்கள் யாவரும் மாஸ்டரின் அபரிமித அருளாசிகளைப் பெற்று தம் வாழ்வில் பேரின்பம் காண்பார்கள் என்பது மட்டும் உறுதி.

9. உள்ளார்ந்த உண்மைகள்

இந்த உலகில் எல்லோராலும் பெரிதும் போற்றி விரும்பப்படுவது பணம். இதை ஆங்கில மொழியில் Money - மணி என்கிறோம். இதில் ஒரு பெரிய இரகசியம் உள்ளடங்கியிருப்பதை பார்க்கலாம். இந்த வார்த்தையின் முதல் எழுத்து M - எம் ஐயும் கடைசி எழுத்து Y - ஐயும் சேர்த்துப்படித்தால் My - மை - என்னுடைய என்ற அர்த்தம் வரும். இதோடு நடுவில் உள்ள ONE-ஐ சேர்த்தால் MY ONE என்றாகும். ONE என்பது சிருஷ்டி கர்த்தாவான முழு முதற்பொருளான எல்லாவற்றிற்கும் மேலான பரம்பொருளையே குறிக்கும். ஆகவே என்னுடைய மேலான பரம்பொருள் என்ற அர்த்தம் தருவதால் தான் இந்த Money என்ற பணத்திற்கு இவ்வளவு மகிமை வந்துள்ளது போலும். இதுவே இதிலுள்ள இரகசியம். மாஸ்டர் வேடிக்கையாக A luck is found in a Trick அதாவது அதிருஷ்டம் என்பது ஒரு தந்திரத்தில் அடங்கியிருக்கிறது என்று கூறுவாராம். மாஸ்டர் அவர்கள் இந்த யோகாஸ்கூல் அடியில் டன் டன் ஆக ரேடியம் என்கிற விலை மதிப்பு மிக்க உலோகம் இருக்கிறது என்பாராம். எனினும் பொருளளவில் இந்த யோகாஸ்கூலை மிகவும் ஏழ்மை

நிலையிலேயே வைத்திருக்கிறார். இதில் ஏதோ தந்திரம் மறைக்கப்பட்டிருக்க வேண்டும். மித்திரர்களே இதிலிலுள்ள அதிருஷ்டத்தை தேடிக்காண வேண்டும்.

இந்த யோக பயிற்சியை ஆரம்பிக்குமுன் மாஸ்டர் மிகவும் இளகிய மனம் உடையவராக இருந்ததாகவும் தன் எதிரில் பிணம் கொண்டு செல்லப்படுவதைப் பார்த்துவிட்டால் ஆழ்ந்த துக்கத்துக்கு உள்ளாகிவிடுவார் என்றும் கூறப்படுகிறது. தன் குழந்தை மரணப்படுக்கையிலிருந்த போது இந்த துக்கம் அவரைப் பன்மடங்கு வாட்டியிருக்க வேண்டும். சொல்லொணா துக்கத்திலும் செயலற்றும் இருந்த நிலையில் பிராணனை நமக்கெல்லாம் அளித்தருளும் சிருஷ்டி கர்த்தாவிடமே நான் சந்துவுக்கு பிராணன் கொடுக்கும்படி கேட்கக் கூடாதா? என்ற எண்ணம் திடிரென்று அவருள் வெளிப்பட்டதாம்.

அது சமயம் சுந்தரம் என்கிற நண்பர் பக்கத்தில் அமர்ந்திருந்தார். அவரிடம் மாஸ்டர் தனக்காக ஒரு செய்தியைக் கொண்டு போய் கொடுக்க முடியுமா? என்று கேட்டாராம். அவர் சரியென்று ஒப்புக்கொண்டதும் மாஸ்டர் அவரைத் தொட்டு உள்ளத்திலெழுந்த தன் எண்ணத்தை செய்தியாக சுந்தரத்தின் மனதில் பதியும்படி செய்தார். சில நிமிடங்களில் சுந்தரத்தின் கண்கள் மூடின. அவர் தன் இருப்பிடத்திலிருந்து அசையவும் இல்லை. அவரது ஸ்தூலத்தின் பிரக்ஞையும் விழிப்பு நிலையும் மாறவுமில்லை. எனினும் தான் சென்று கொண்டிருக்கும் பலவான மேல்நிலைகளைப் பற்றி சப்த மூலம் தெரிவித்துக்கொண்டே இருந்தார். ஏழு நிலைகளைக் கடந்து சென்றார். ஒவ்வொரு நிலையின் ஆரம்பத்திலும், ஒரு பருமனான ஆசாமி அவரைத் தடுத்து "நானே மாஸ்டர் என் அதிகாரத்தை யாரொருவரும் எதிர்க்கமுடியாது" என்று அதிகாரத்தோடு சப்தமாக வெளியிட்டபோதும் அந்த ஆசாமியால் சுந்தரத்தை தடுத்து நிறுத்த முடியவில்லை. கடைசியில் எட்டாவது நிலையில் ஒரு

மகோன்னத புருஷரை சந்தித்தார். அவர் நீண்ட வெண்தாடியோடு விசித்திரமான தேஜோ மயமான தோற்றத்தோடு இருந்தார். தன்னைத் தடுத்த மற்ற ஆசாமிகளுக்கும் இவருக்கும் இருந்த பெருத்த மாறுபாட்டிலிருந்தே தான் தேடி வந்த மகா புருஷர் பிராண தாதா இவராகத்தான் இருக்க வேண்டுமென்று ஊகித்ததும், இவர் கொண்டு வந்த வேண்டுதல் செய்தி சற்றே மாறி, ''மாஸ்டருக்கு பிராணன் தேவை'', என்று வெளியாகவே கொடுபட்டது. "க்ரேண்டட்" என்ற பதில் உடனே வெளியானது. சில நிமிடங்களில் சுந்தரம் பூமண்டலத்தை அடைந்ததும் பழைய நினைவுக்கு வந்தார்.

இந்த எதிர்பாராத, அனுபவமும் அதிருஷ்ட வசமாக கிடைத்த பிராண தாதாவின் சந்திப்பும் அவரது சாதகமான விடையும் தகப்பனாராகிய மாஸ்டருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. எனினும் ஏதோ காரணத்தால் குழந்தை சந்து அதிக நாட்கள் நீடித்து வாழ்ந்திருக்கவில்லை. மாஸ்டருக்கு ஏன் என்று தெரிந்து கொள்வது பெரும் புதிராகவே இருந்தது. பல நாட்கள் மனம் குழம்பி தூக்கமின்மையால் பல இரவுகள் கழித்த பிறகு அந்த பிராண தாதாவை தானே நேரில் சந்திக்க முடிவு செய்தார். இதுவே பூமிக்கும் மனிதனுக்கும் ஒரு வியக்கத்தக்க எதிர் காலத்தை நிர்ணயிக்கக் கூடியதாய் அமைந்தது.

மாஸ்டர் பிராணன் கேட்கிறார் என்ற வேண்டுதல் ஒரு பெரிய வரப் பிரசாதமாகவே முடிந்திருந்தது. "கொடுபட்டது" என்ற பதில் குறிப்பாக குழந்தை சந்துவுக்கு என்று கொடுக்கப்படாததால் அதை எல்லா மக்களுக்குமே கொடுபட்டதாக கொள்ளலாமே என்ற ஆலோசனை ஏற்பட்டது. யாருடைய பாதுகாப்புக்காக (பிராணன்) கொடுக்கப்பட்டது. எந்த தனி ஒருவர் பேரும் குறிக்கப்படாததால் மாஸ்டர் தன்னுடைய பாதுகாப்பின் கீழ் அளவற்ற பிராணன் கிடைத்திருப்பதாக உணர்ந்து அந்த பிராணனை தேவையுள்ள, பூமியின் மீதுள்ள எந்த

ஒரு ஜீவனுக்கும் அளித்து அந்த குறையை நிவர்த்திக்க முடியும் என்பதை உணர்ந்து கொண்டார். தன்னுடைய சகோதர சகோதரர்களாகிய மக்கள் எல்லோருக்கும் இதை எப்படிக் கொடுப்பது என்று தானாகவே யோசிக்க ஆரம்பித்தார். இந்த சரீரத்தின் தேவை என்ன? இந்த சரீரத்துக்கு தேவை பிராணன். பிராணனுக்கு தேவையாயிருப்பது எது? பிராணனுக்குத் தேவை ஒரு சரீரம் என்ற அதே பதில் திருப்தி அளிக்கவில்லை. மேலும் யோசித்து யோசித்து பிராணனுக்கு தேவை சாஸ்வதம் - ஸ்த்ரத்வம் என்ற பதில் கிடைக்கப்பெற்றார். இந்த பதில் கிடைத்த பிறகு பிராண தாதாவாகிற சிருஷ்டி கர்த்தருக்கே ஆரிஜினுக்கே தனது படைப்பிலுள்ள குறைபாடு - தன்னால் படைக்கப்பட்ட எல்லா ஜீவன்களும் பிராணன் குறைபாட்டால் மரணமடைகின்றன என்ற குறைபாட்டை உணர நேரிட்டது. பிராணனுக்கு தேவை சரீரம் மட்டுமல்ல, முதுமையடையாத, அழிவடையாத சாஸ்வத சரீரம் வேண்டும் என்பது தெரிய வந்தது. ஒரு சரீரத்தில் பிறந்த ஆன்மா மரணத்திற்குப் பிறகு வேறொரு சரீரத்தில் புகுந்து ஜீவித்து வருவதை உண்மையில் அந்த ஜீவன் சாஸ்வதமாக இருப்பதாக ஒப்புக்கொள்வதற்கில்லை. ஏனெனில் முன் ஜன்மத்தில் பெற்ற அனுபவ அறிவை அவன் மறு ஜன்மத்திற்கு கொண்டு செல்வதில்லை. அவன் மறுபடியும் அந்த அறிவைத் தேட வேண்டியே உள்ளது. பிறவிக்கு வருவதே ஒரு சரீரத்தை அடைந்து அதை அழியாத சரீரமாக மாற்றி, அதில் சாஸ்வதாக இருந்து வர வேண்டுமென்பதாகவே இருக்க வேண்டும். ஆகவே மரணம் என்பது இந்த எண்ணம் ஈடேற்றப்படவில்லை என்பதையே உணர்த்துகிறது. இன்றைய சிருஷ்டிக்கிரமத்தில் ஒரே சரீரத்தில் சாஸ்வதமாய் இருப்பதென்பது இயலாததாகவே இருந்து வருகிறது. மேலேயுள்ள அறிவு நிலைகளை ஸ்தூல உணர்வோடு உணர்ந்து கொள்ள முடியாமையே இன்றும் நீடித்து வருகிறது. ஆனால்

ஸ்தூல பிரக்ஞையோடு, விழிப்பு நிலையோடு எல்லா மேலான அறிவு நிலைகளும் உணர்ந்து கொள்ளப்படவேண்டும். இது தான் முழுமைப் பேறு, இதுவும் ஸ்தூலப்பிரக்ஞையிலேயே பெறப்படவேண்டும். இது தான் சிருஷ்டி பரிணாம வளர்ச்சியின் முடிவாய் உச்ச கட்டமாய் இருத்தல் வேண்டும். சுருங்கச் சொல்வதென்றால் இன்றுள்ள நிலையில் பிராணசக்திக்கு மாறுபாட்டிற்குள்ளாகாத, அழிவுக்குள்ளாகாத சாஸ்வத ஸ்தூல சரீரமே தேவைப்படுகிறது.

தொன்று தொட்டே இருந்து வரும் இந்த சிருஷ்டியின் குறைபாடு தெரிய வந்ததும், மேற்கொண்டு செய்ய வேண்டிய பரிகாரம் தெளிவானது. பழைய நிலை மாறி புது நிலைக்கு வழி ஏற்படவேண்டும். அழிவு அழியாமைக்கு வழி கொடுக்க வேண்டும். முதலாவது ஆரிஜின்னின் வேலை மெதுவாக ஐயத்துக்கு இடமில்லாமல், இரண்டாவது ஆரிஜின் வேலைக்கு இடம் கொடுத்தாக வேண்டும். மாஸ்டர் இந்த வேலையை செய்து முடிப்பதே தனது கடமையாகும் என்பதை உணர்ந்து சந்தோஷத்தோடு இப்பணியை ஏற்றுக்கொண்டார். தான் அதிர்ஷ்ட வசமாக பெற்ற வரத்தால் அளவற்ற பிராண சக்தி தனது பாதுகாப்பில் இருந்ததால் இந்த வேலையை சிருஷ்டியின் குறைபாட்டை- தேவையை சுலபத்தில் நிறைவேற்றுவதற்கான தகுதியும் அதிருஷ்டவசமாக வாய்த்திருந்தது. தனக்கு கிடைத்த அளவற்ற பிராண சக்திக்கு மொர்ரிலைப் ஆனந்த உயிர் என்று பெயர் அளித்தார். சிருஷ்டி கர்த்தாவிடமிருந்து பிறவிக்கு வந்த உயிரணுவுக்கு உயிர் சக்திக்கு - சீப் லைபுக்கு தலைமை உயிர் என்று பெயர் கொடுத்தார். பிராண சமுத்திரத்திலிருந்து ஏதோ ஒரு சலனத்தின் போது சிதருண்டு வந்த ஒரு புள்ளி வடிவ சிற்றணுவே காலா காலத்தில் பிரிந்து பலவாகி இன்று எண்ணிறந்த ஜீவன்களாகி இப்பூமியின் மீது இயங்கி வருகின்றன. ஆகவே பிராண சமுத்திரத்திலிருந்து பிரிந்து வந்து பல வாயுள்ள

தலைமை உயிரை பிரித்து விட்டால் எஞ்சியிருப்பது ஆனந்த உயிராகத்தான் இருக்கும். மாஸ்டருடைய கருத்து பிரிந்துள்ள பலவான ஜீவன்களுக்கும் இந்த பிராண சமுத்திரத்திற்கும் ஒரு இணைப்பை ஏற்படுத்திக்கொடுப்பது தான். மயக்க நிலையில் ஏற்பட்ட இந்த பிரிவு விழிப்பு நிலையில் முழு பிரக்ஞையோடு மீண்டும் இணையும் படி, ஒன்று கூடிக் கலக்கும் படி செய்வது தான் மாஸ்டர் வேலை.

இந்து மதத்தில் சிருஷ்டி கர்த்தாவை பிரம்மா என்று அழைக்கிறார்கள். இது பிரம்மை என்ற மயக்க நிலையை குழப்ப நிலையை - குறிப்பதாகவே இருக்கிறது. பிறவிக்கு காரணமாயிருப்பது ஆணும்பெண்ணும் கலவியில் கூடுவது தான். இதன் மூலம் கரு உண்டாகி கற்பம் தரிக்கிறது. இது ஒருவித மயக்க நிலையில் தான், தன்னை மறந்த நிலையில் தான் ஏற்படுகிறது. இந்த கலவியே பிராண சமுத்திரத்திலிருந்து ஒரு உயிர்ப்புள்ளி பிரிந்து வரக் காரணமாயிருந்திருக்கிறது. பரிணாம வளர்ச்சி மூலம் பிரிந்த அணு, தான் பிரிந்து வந்த ஆதி நிலையை-முழுமை நிலையை திரும்பி அடையவே இடையறாது பாடுபட்டு வருகிறது. இந்த முயற்சி வெள்ளப்பிரவாகத்தில் வேகமாக அடித்துச் சொல்லப்படும் துரும்பொன்று எதிர் நீச்சல் அடித்து தான் முன் இருந்த இடத்தை அடைய முயற்சிப்பதற்கே ஒப்பாகும். இதை விட அதற்கு வெள்ளத்தின் போக்கில் சென்று சமுத்திரத்தை அடைவதே சுலபம். அதேபோல் இந்த பரிணாமவளர்ச்சியின் ஊடே சென்று பிரபஞ்ச எல்லையை அடைந்து அந்த மூல இடத்தை அடையக்கூடும் என்ற நம்பிக்கையே ஏற்புடையதாகும். இந்த முன்னேற்ற பாதை வெகு தூரத்தில் இருப்பதோடு காலம்செல்லச் செல்ல எதிர் பார்க்கும் முழுமைப்பேறும் மேலும் மேலும் விலகிக்கொண்டு போவதாகவே தோன்றுகிறது. இந்த இடத்தில் சீப் லைப் அதாவது பிறவிக்கு வந்துள்ள ஜீவாத்மாவுக்கு குழப்பமாகவே இருக்கிறது.

பின்னோக்கி சென்று முழுமையடையலாம் என்ற நம்பிக்கையும் முழுமையாயில்லை. இந்த சங்கடமான நிலை இன்னும் பல கோடி ஆண்டுகளுக்கும் தொடர்ந்து கொண்டே தான் இருக்கும். ஏதோ அதிருஷ்ட வசமாக மாஸ்டர் செய்து பார்த்த பரிசோதனை மூலம் அளவற்ற பிராண சக்தி கை வரப்பெற்று தற்போது மாஸ்டர் அவர்கள் இந்த முற்றுப் பெறாத தொடர்ந்து வரும் முன்னேறும் காலவரையற்ற முன்னேற்ற போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார். பிராண சக்தியை உள்வர முடியாமல் தடுத்து நிற்கும் லிங்க கவசத்தை (வைரமுற்றுத் திரையை) ஆதியிச்சையாகிய ஸ்தூல சாஸ்வதத்தையடைய வேண்டும் என்ற ஆதங்கத்தால் ஆசையால் துளைத்து பிராண சமுத்திரத்திலுள்ள பிராண சக்தி தற்போதுள்ள ஸ்தூல சரீரத்திற்குள் புகுந்து, அதன் மூலம் ஆனந்த உயிரும் அழியாமையும் கிடைக்கும்படி செய்திருக்கிறார். இதன் காரணமாக ஜீவாத்மா சரீரத்தை விட்டுச்சென்று பிரம்மத்தோடு ஐக்கியமாகி மோக்ஷம் அடைவதென்பது இயலாததாகிவிட்டது. முன்னே செல்வதென்றால் அப்படி முடிவில்லாமலே சென்று கொண்டிருக்க வேண்டியுள்ளது. இதற்கு சுலபமான வழி அந்த ஆனந்த உயிரே தானே தன்னிலிருந்து பிரிந்து வந்த ஜீவாத்மாவுக்குள் புகுந்து அதனுடைய தாகத்தை அழியாமை என்ற மூல இச்சையை பூர்த்தி செய்து வைப்பது தான். ஜீவாத்மா பரமாத்மாவை அடைவதென்பது என்றென்றும் இயலாமல் இருப்பதால் பரமாத்மாதான் தன்னிலிருந்து பிரிந்து வந்த தன் பகுதியாகிய ஜீவாத்மாவை வந்தடைந்து, அதன் இச்சையை பூர்த்தி செய்ய வேண்டும். தகப்பனை விட்டுப் பிரிந்து நடுத்தெருவில் வழி தெரியாது அலையும் குழந்தை தானே வழி கண்டு பிடித்து தன் தகப்பனாரை அடைய முடியும் என்று நினைப்பது முட்டாள் தனம் அல்லவா. எனினும் பழைய யோக வழி முறைகள் யாவும் தனித்த ஜீவாத்மா தான் தன்னுடைய

யோகப்பயிற்சியால் அந்த பரமாத்மாவை அடைய வேண்டுமென்றே பறை சாற்றி வருகின்றன. இது குதிரைக்கு முன்னால் வண்டியை நிறுத்தி பயணம் செய்ய முயற்சிப்பதற்கே ஒப்பாகும். இந்த பிரபஞ்ச வாழ்க்கையின் குறிக்கோளாகிய அழியா சரீரம் பெற வேண்டும் என்பது நிறைவேற வேண்டுமானால் இதற்கான மார்க்கம் அந்த சிருஷ்டி கர்த்தரிடமிருந்தே தான் வரவேண்டும். படைப்பாளியிடமிருந்து தான் படைக்கப்பட்ட ஜிவனுக்கு அழியாமை வர வேண்டும்; முழுமைப்பேறு தான் தன் பகுதிக்கு வந்து அதை முழுமையாக்க வேண்டும். தகப்பனிடமிருந்துதான் வழி பிறக்க வேண்டும். குழந்தையிடமிருந்தல்ல. மாஸ்டர் சொல்வதெல்லாம் இன்று நடந்து வரும் வழி முறை தலைகீழாக மாற்றப்படவேண்டும் என்பதேயாகும். மனிதன் நினைக்கிறான் இறைவனே முதன்மையானவர் என்று. ஆனால் இறைவனோ தனது படைப்பின் உச்சக்கட்டமே மனிதன் என நினைக்கிறார். சிருஷ்டி கர்த்தருள்ள - ஆரிஜின் உள்ள அந்த உச்ச கட்டத்தில் இருந்து கீழே நோக்கி இந்த பிரபஞ்ச சிருஷ்டியைப் பார்க்கும் மாஸ்டர் கூறுவது போல் உச்ச கட்டத்திற்குச் சென்று பின் நோக்கிப் பார்க்கும்போது தான் சுற்றியுள்ள முழு வட்டமும் தெரியும்.

ஏனெனில் எல்லா ஆரைகளும் (ரேடியஸ்களும்) வட்டத்தின் மையத்தில் தான் கூடியிருக்கும். எனவே வட்டத்தின் விளிம்பிலிருந்து பார்த்தால் ஒரு திக்கில் தான் மையத்தை நோக்கிப் பார்க்க முடியும். ஆனால் அந்த மையத்திலிருந்து பார்த்தால் சுற்றி மற்ற திக்குகளிலுள்ள எல்லா பொருள்களையும் பார்க்க முடியும். ஒவ்வொரு மனிதனுடைய வாழ்வும் இந்த முழு வட்டத்தின் ஒரு ரேடியஸ் - ஒரு ஆரையைப் போன்றது. எல்லா மக்களின் வாழ்வின் மொத்தமும் வட்டத்தின் எல்லா ஆரைகளையும் மொத்தமாகப் பார்ப்பதற்கே ஒப்பாகும்.

எவ்வளவோ சந்நியாசிகளும் மகான்களும் "நாம்" என்ற தத்துவத்தை பன்மை நிலையையும் "நான்" என்ற ஒருமை நிலையையும் ஒப்பிட்டு "நாம்" என்பதன் மகிமையை பற்றியே பேசியுள்ளார்கள். மாஸ்டர் அவர்களோ ஒன்று பல என்பதிலோ, நீ நான் என்பதிலோ நம்பிக்கை வைக்கவில்லை. நாம் என்ற பன்மையில் மட்டுமே அவருக்கு முழு நம்பிக்கை. ஏனெனில் நாம் என்ற வார்த்தையில் ஒருமையற்ற பன்மை காணப்படுகிறது. அந்த பன்மை குறிக்கும் பரம் பொருள் தான் பல நான்களாகப் பிரிந்து வந்துள்ள நானை வந்தடைய முடியும். ஏனெனில் என் ஒருவனால் மீ (ME –என்னால்) யினால் பன்மையாகிய "நாம்" என்ற நிலையை, எல்லாமாயுள்ள பரம்பொருளை "நாம்" என்ற நிலையை என்ன பாடுபடினும் அடையமுடியாது.

10. எதிர்பார்ப்புகள்

சென்ற 17 ஆண்டு காலத்தில் அதாவது 1922 மே மாதம் மாஸ்டர் மறைந்த பிறகு பல எதிர்பார்ப்புகள் நடந்தேறின. எனினும் இன்னும் ஏராளமானவை எதிர் பார்ப்புகளாகவே இருந்து வருகின்றன. மாஸ்டருடைய ஆயுள் சாதாரணமாக 75 வயது என்றாலும் அவர் சாஸ்வத சரீரத்தோடு வாழும் மனிதர்களைத் தாங்கும் பலத்தை பூமிக்கு கொடுக்க வேண்டி தனது யோக சித்தியால் தனது சரீரத்தை கரைத்துக்கொண்டு தன் 54 வயதிலேயே பூமியின் மையத்தை தன் சூக்ஷம சரீரத்தோடு (ஆஸ்ட்ரல் சரீரத்தோடு) சென்றடைந்து விட்டார். இந்த யோகமானது இயல்பாக அவரது ஆயுள் முடிய வேண்டிய 75ம் வயதிற்குள் பூர்த்தியடைந்து அவர் மீண்டும் மறைந்த தன் ஸ்தூல சரீரத்தோடு பூமியின் மீது தோன்றியிருக்க வேண்டும். 1941 மே 12 ம் தேதி சூரியன், புதன், சுக்கிரன், குரு, சனி ஆகிய ஐந்து கிரகங்கள் ரிஷப ராசியில் கூடும்போது ஜோதிடர் கருத்துப்படி பூமியில் பலவாரான கெடுதிகளும், நாசங்களும், அபாயங்களும்

ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மாஸ்டர் அவர்கள் இதை முன் கூட்டியே அறிந்து, பூமிக்கு ஹாரான் கவர் என்கிற பாதுகாப்பு கவசத்தை அமைத்து இந்த கேடுகளிலிருந்தும் அபாயங்களிலிருந்தும் பாதுகாத்துள்ளார். ஆகவே இதை உணர்ந்திருக்கும் மித்திரர்கள் பூமியின் எதிர்காலத்தைப்பற்றி கவலை கொள்ளத் தேவையில்லை என்ற முழு நம்பிக்கையில் தான் இதுகாறும் இருந்து வருகிறார்கள். 1941 அல்லது 1942 ம் ஆண்டில் ஒரு காமெட் வால்நஷத்திரம் கண்ணுக்கு புலப்படும் ரீதியில் பூமண்டலத்தில் தோன்றக்கூடுமென்றும், அதன் மூலம் பூமியை வந்தடையும், சூரிய குடும்பத்திற்கு அப்பாற்பட்டிருந்து வரும் அபார சக்தியானது மாஸ்டர் விருப்பம் போல் பூமிக்குத் தாங்கும் சக்தியை பலத்தை கொடுத்தருளும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வேலை நடந்த பிறகு தான் ஆனந்த உயிர் அல்லது மொர்ரிலைப் வேலையும் துவங்கும். இம்மாதிரி சூரிய குடும்பத்திற்கு அப்பாலிருந்து வந்து தோன்றிய ஹாலிஸ் காமெட் மூலம் கிடைக்கப்பெற்ற சக்தியைக் கொண்டுதான் மாஸ்டர் அவர்களால் 1910ம் வருடம் இந்த நூதன யோகம் ஆரம்பிக்கப்பட்டது. எனவே யோக முடிவுக்கும் அம்மாதிரி ஒரு சந்தர்ப்பம் வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி ஒரு காமெட் தோன்றிய பிறகு சுக்கிர கிரகமானது பூமியின் ஆகர்ஷண சக்தியால் இழுக்கப்பட்டு பூமண்டலத்தில் நுழைந்து தற்போதுள்ள சந்திரனைப்போல் இரண்டாவது சந்திரனாக ஒளி கொடுத்து வரும். பூமியின் வேகம் சிறுகச் சிறுக குறைந்து சூரியனைச் சுற்றி வருவதும் நின்று தானே சுயஞ்சோதியோடு பிரகாசித்து நிற்கும். அப்போது சுக்கிரனும் சந்திரனும் இரண்டுமே எப்போதும் பூமியை சுற்றி வலம் வரும். வளர் பிறை தேய்பிறை நிலையும் மாறி பூர்ண சந்திரனாக விளங்கும். தற்போது 23டிகிரி சாய்ந்துள்ள பூமியின் அச்சும் செங்குத்தாகி நேராகும். சூரியனை பூமி சுற்றி வருவதும் நின்று இதனால் முன்போல் ஏற்படக்கூடிய

சீதோஷ்ண மாறுதல்களும் நின்று விடும். ஆனாலும் பூலோக வாழ்வும் அதற்கேற்ப மாறி அமையும். மற்ற கிரகங்கள் யாவும் மாஸ்டர் ரெகுலேஷன் படி புது வாழ்க்கை இயல்பாக நடப்பதற்கு வழி செய்யும். காமெட் காட்சிக்கு வந்ததும் குண்டலினியின் மையத்திற்கும் தலை உச்சியில் உள்ள சகஸ்ராராவுக்கும் இடையே இருக்கும் நரம்புக்குழல் ஒரு விதமான பேரொளியோடு பிரகாசிக்கும். இதை மீடியம்கள் அப்போது உணர்ந்து கொள்ள முடியும். அதன்பிறகு திவ்ய பார்வைகள் சித்தியாகும். அதன் மூலம் உள் அவயங்களான இருதயம் சுவாசப்பை,வயிறு, மூளை யாவும் காசஷிக்குப் புலனாகும். எதிரிலிருக்கும் மரத்தையோ, ஒரு அறையினுள் உள்ள சாமான்களையோ வெளியிலிருந்து பார்ப்பது போல் சரீரத்தின் உள் அவயங்களும் தத்ரூபமாக காசஷியாகும். தோலை உரிக்காமலே ஒரு ஆரன்ஜு பழத்திற்குள் உள்ள விதைகளை கணக்கிட்டுச் சொல்ல முடியும். இந்த பார்வைக்கு "ஈகோ. ஸ்டோன்" என்று பெயர். நாளடைவில் சரீர எலும்புகள் யாவும் உருகி ஒரு செல்லுலாய்ட் பொம்மைபோல் உருவம் மாறும். தகப்பனாரிடமிருந்து வரும் எலும்புச்சத்து நிலைக்கப்பெற்று தாய் சத்திலிருந்து வந்த தசையும் மாம்சமும் வெளியேற்றப்பட்டுவிடும். இது பழைய தோலை உரித்துக்கொண்டு புது தோலோடு விளங்கும் பாம்பின் தோலுரித்தலுக்கு ஒப்பாகும். உஸ்வாச நிஸ்வாச வேலையும் நின்று விடும். நெருப்பாலும் மின்சாரத்தாலும் கத்தியாலும் கூட அழிக்க முடியாத வலிமையோடு சரீரம் விளங்கினாலும் சரீரம் வெகு லேசாகவே இருக்கும். காற்றில் காற்றாடி போல் பறந்து செல்லவும் இயலும். ஒரு கிரகத்திலிருந்து மற்றொரு கிரகத்துக்குப் போய் வருதல் சாதாரண நிகழ்ச்சியாகி விடும். பசி இருக்காது. ஆனால் வேடிக்கைக்காக சாப்பிடலாம். வம்ச விருத்திக்கு காமப்புணர்ச்சி வேண்டியிருக்காது. விரோதம் இருக்காது. நோய் இருக்காது. சண்டை இருக்காது. எங்கும் பிராண

சக்தி நிறைந்திருக்கும். அதனால் நோய் நொடி இருக்காது. இக்காரியங்கள் யாவும் இந்த யோக பூர்த்தியும் கூட காமெட்-வால் நஷத்திரத்தின் வருகையை எதிர் பார்த்தே இருக்கிறது. இவைகள் கேட்க சிரிப்பாய் இருக்கலாம். ஆனால் பொறுமையோடு இருப்பவர் நிச்சயம் பூர்த்தி காலத்தில் பெருமகிழ்ச்சியடைவார்.

11. யோகம்

நமது மீடியம்களால் அப்யசிக்கப்பட்டு வரும் யோகம், சாதாரணமாகவும் சுலபமாகவும் காணப்பட்டாலும் முற்றிலும் புதுமையானதாகும். இது பிருக்த ரஹித தாரக ராஜயோகம் என்று அழைக்கப்படுகிறது. இது வரை வெளியிடப்படாததால், தெரிந்து கொள்ளப்படாமல் மறை பொருளாகவும் இரகசியமாகவும் இருந்து வந்த சிருஷ்டி இரகசியங்களை காட்டிக்கொடுக்கக்கூடியதாக இந்த யோகம் அமைந்துள்ளது. இது எல்லா யோகங்களுக்கும் மேலானதாகும்.

இராஜாவாகும், ஜீவாத்மாவின் ஆசையையொட்டி அதன் பூலோக வாழ்வை நீட்டியும், சாஸ்வதத்தை அளித்தும் பூரணத்துவம் வழங்கக்கூடிய யோகமாகும். பிருக்தம் என்றால் எந்த நிலையிலும் வெளிவரக்கூடாமல் பாதுகாக்கப்பட்டு வரும் இரகசியமாகும். ரஹிதம் என்றால் அந்த பாதுகாப்புக் கவசத்தை துளைத்து அந்த இரகசியத்தை வெளிக்கொணர்தல் ஆகும். தாரகம் என்றால் அந்த இரகசியங்களை பரிணாம வளர்ச்சிக்கு உபயோகப்படுத்தி பூர்த்திக்கு கொண்டுவரும் சக்தியாகும். இராஜயோகம் என்பது வித்ரயோகம், த்ருகுணயோகம், வால்ய யோகம், அக்னியோகம், ஆக்னயோகம், சிரின்ஜித இராஜயோகம் என் ஆறு வகைப்படும். ஒருவர் இந்த ஆறு யோகங்களை வரிசைக் கிரமாகவும் ஒன்றன் பின் ஒன்றாகவும் செய்து முடித்தால் அவர் ஒரு முழுமையான இராஜயோகியாகி தாரக இராஜயோகத்தை அப்யசிக்கக்கூடிய தகுதி பெறுவார். இந்த தாரக

இராஜ யோகமும் ஹிது யோகம், பிரம்ம யோகம், லிம்பியோகம், சுக்ரித யோகம், வைத்ரயோகம், பஞ்ச யோகம் என ஆறுவகைப்படும். இந்த ஆறு யோகங்களையும் முறைப்படி பூர்த்தி செய்த பிறகு ஸ்தால சாஸ்வதத்தை அளிக்கக்கூடிய பிருக்த ரஹித தாரக இராஜயோகத்தை செய்யக்கூடிய தகுதி பெறுவார். மாஸ்டர் சி.வி.வி. அளித்துள்ள இந்த நூதன யோகம் மேற்படி எல்லா யோகங்களின் பலனையும் அளிக்கக்கூடிய ஒரு குறுக்கு வழி முறையாகும்.

மேலே கூறிய எல்லா யோகங்களுக்கும் குண்டலனி சக்தியே பிரதான ஆதார சக்தியாகும். மாஸ்டர் கருத்துப்படி பல சித்துக்களையும் அளிக்கக்கூடியது குண்டலி சக்தி தான் என்ற போதிலும், சிருஷ்டியின் பரிணாம வளர்ச்சிக்கு அடிப்படையாக இருப்பதே குண்டலினி சக்திதான் என்று தெரிவித்துள்ளார். உயிர் சக்தி வெளி வரக்காரணமாயிருப்பது அடிப்படையாயிருப்பது அன்புதான். குண்டலினி சக்தியால் அடையக்கூடிய பலவான சித்திகளுக்கும் அப்பாலாய் அதன் உள்ளார்ந்த இயல்பு என்ன என்பதை ஆழ்ந்து ஆராய்ந்தால், அழியாத பூமியில் அழியாத ஒரு மனித உருவை உண்டாக்குவதே குண்டலினியின் நோக்கமாகவும், பிரபஞ்ச பரிணாம வளர்ச்சியின் நோக்கமாகவும் இருப்பதை தெரிந்துகொள்ளலாம். பரிணாம வளர்ச்சியின் படைப்பு யாவற்றிலும் பூமியும், அதில் வாழும் மனிதனுமே முதலிடம் வகிக்கின்றன. எனினும் இரண்டுமே சாஸ்வததன்மை பெறவில்லை. சாஸ்வதம் வெறும் காலத்தை ஒட்டியது மட்டுமல்ல. மாறுபாடற்ற நிலை, அதாவது மாறாது நிலைத்திருக்கும் நிலையாக இருக்க வேண்டும். காலம் என்பதும் சாஸ்வதம் என்பதும் இரண்டும் வெவ்வேறானவை. காலாகாலத்திற்கும் அதாவது தொடர்ந்து நீடூழி காலம் வாழ்வதென்பது சாஸ்வதம் ஆகாது. சிருஷ்டி என்பதும் பரிணாம வளர்ச்சி என்பதும் குண்டலினி சக்தியால் இயக்கப்பட்டு வருவது.

அதன் உள்ளார்ந்த கருத்து மாறுபாட்டுக்கு ஆட்படாமலும் நிலையாக ஸ்திரத்தன்மையோடு என்றும் அழியாதும் வாழ்ந்து வருவதுதான். உருவத்திலும் இடத்திலும் மாறுபாடு என்பதுதான் தற்போது இருந்து வரும் நிலை. இது ஒருபோதும் சாஸ்வதமாகாது. மகரிஷிகள் விரும்பி நின்ற மோக்ஷம் அல்லது நிர்வாண பதவியை இதுவரை பூமியில் யாரும் அடைந்திருப்பதாகத் தெரியவில்லை. இன்றுள்ள பரிணாம வளர்ச்சிக் கிரமப்படி இந்த நிர்வாண பதவியை அடைய இன்னும் பலகோடி ஆண்டுகள் கூட ஆகக்கூடும்.

ஆரம்பத்தில் குண்டலினி என்பது வெறும் க்ரியா சக்தியாக மட்டுமே இருந்தது. அந்த கிரியா சக்திதான் இச் சிருஷ்டி வேலையை துவக்கியது. அது பல வகையில் ஞானம் பெற்று அந்த அனுபவமே அந்த சுத்த க்ரியா சக்திக்கு கவசமாய் போர்வையாய் அமைய ஆரம்பித்தது. உலோகங்களாய் இருந்தபோது பெற்ற அனுபவம் முதல் போர்வையாகவும், தாவரமாய் பெற்ற அனுபவம் இரண்டாம் போர்வையாகவும், மிருகங்களாய் பரிணாமம் அடைந்து பெற்ற அனுபவங்கள் மூன்றாவது போர்வையாகவும் அமையப் பெற்று தற்போது மனித சிருஷ்டி ஏற்பட்ட பிறகு நான்காவது பரிணாமத்தை அடைந்து வருகிறது. மனித வளர்ச்சி முழுமை பெற்றதும் இந்த நான்காவது போர்வையும் பூர்த்தியாகி அதிலிருந்து வேறேதேனும் உயர்நிலை சிருஷ்டி ஏற்படக்கூடும். தற்போது மனிதன் வந்துள்ள நிலை மூன்றரை போர்வை அளவாகத்தான் இருக்கிறது. இம்மாதிரி குண்டனியானது கணக்கற்ற காலம் பரிணாம வளர்ச்சியில் ஈடுபட்டு கணக்கற்ற போர்வைகளையும் எதிர்காலத்தில் அடைந்து வரலாம். ஆனாலும் அதனுடைய சுய இச்சையாகிய மாறுபாடற்ற சாஸ்வதம் என்பது அடையப்படாததாகவே இருந்து வரும். நன் நான்கு யுகங்களாக 27 சதுர்யுகங்கள் இதுவரை சிருஷ்டி நடந்து வந்துள்ளதாக அதாவது (116,640, 000 வருட

காலம்) காலம் கடந்து வந்திருப்பதாக சொல்லப்படுகிறது. மேலும் வர இருக்கும் கோடானு கோடி ஆண்டுகளில் சிருஷ்டியாம்சத்தில் எத்தனையோ மாற்றங்களும் மேலான உயர் நிலை ஜீவராசிகளும் கூட உண்டாக்கப்படலாம். ஆனால் இவை நிலைத்திருக்கும் என்பதற்கு உத்திரவாதம் ஏதுமில்லையே சூரிய மண்டலத்தில் திடீரென ஏற்படும் ஊழி பெருவெள்ளத்தாலோ, ஊழித்தீயாலோ பூமி சிதறுண்டு அழிந்து போகலாம். அல்லது பௌதிக ரசாயன மாற்றங்களால் மனித வாழ்க்கைக்கும் மற்ற உயிரின் வாழ்க்கைக்கும் ஒத்ததாக இல்லாமலும் மாறிவிடலாம். இம்மாதிரி இதுவரை மூன்று பிரளயங்கள் ஏற்பட்டுமூன்று பூமிகள் அழிந்து போய் இருப்பதாக சாஸ்திரங்களில் பார்க்கிறோம்.

சிருஷ்டி பரிணாம வளர்ச்சி அதாவது எவல்யூஷன் என்பது இரண்டு பாகங்களாக - ஒன்று உருவ வளர்ச்சி மற்றொன்று இருக்கை நிர்ணயம் அதாவது பிக்சர் பார்மிங் அண்ட் ஸ்பேஸ் பிக்ஸிங் என்பதாக முன்னேற்றம் காணப்பட்டு வருகிறது. ஆனால் அவையிரண்டுமே காலத்தின் வழியாக கட்டுண்டு இருந்து வருகின்றன. மாறுபாடில்லாமையே குண்டலினியின் இயல்பு என்பதால் இந்த குணத்தை எந்த வழியில் இந்த பரிணாம வளர்ச்சியின் மூலம் நிறைவேற்றி வைப்பது என்பதுதான் சிருஷ்டியாம்சத்தின் ஆரிஜினின் வேலையாக இருந்து வருகிறது. தான் சிருஷ்டித்த ஒன்றை அழித்தொழிப்பதற்கு சிருஷ்டி கர்த்தாவுக்கு விருப்பம் இருக்க முடியுமா? ஒரு தகப்பன் நொண்டியாகவோ, முட்டாளாகவோ பிறந்து விட்ட தனது குழந்தையை தனக்கு இன்னும் பல நல்ல குழந்தைகள் இருக்கிறது என்பதற்காக அந்த குழந்தை சாகட்டும் என்று கவலையின்றி விட்டு விட விரும்புவானா? காரணம் என்ன? ஒரு உயிர் தோன்றுவதற்குக்காரணமாயிருந்த புனிதமான அன்பு அந்த உயிர் அழிந்து பட விருப்பப்படுவதில்லை. எவ்வளவு கஷ்டங்களுக் குள்ளானாலும் உயிரோடு இருக்கவே எவரும்

போராடி வருவதை காண்கிறோம். எவ்வளவு கொடுமைகளுக்கு ஆளானாலும் சகித்துக்கொண்டு உயிரோடு இருக்கப் போராடுகிறதே ஒழிய சாவதற்கு எவ்வுயிரும் விரும்புவதில்லை. உயிரின் இயல்பும் அன்பின் இயல்பும் இது தான் - நிலைத்திருப்பதுதான் - அழியாமைதான்.

காரணமின்றி எந்த ஒரு காரியமும் உண்டாவதில்லை. உள்ளாழ்ந்திருக்கிற கருத்தே வெளியில் செயலாற்றலாக வெளியாகிறது. இயல்பூக்கம் என்று இதைக் கூறுவார்கள். குண்டலினி என்ற சமஸ்கிருத வளத்தைக்கு பல அர்த்தங்கள் உண்டு. இவற்றுள் மிகவும் பயனுள்ளதான கருத்து உச்ச நிலையிருக்கும் உள்ளார்ந்த கருப்பொருள் என்று கொள்ளலாம். குண்டலினியின் உள்ளார்ந்த பல தன்மைகள் வெளியில் பரிணாம வளர்ச்சியின் செயலாற்றல்களாக வெளிப்பட்டுவிட்டன. ஆனால் அதன் மிக முக்கிய இயல்பான மாறுபாட்டுக்கு உட்படாமை என்பது, அழியாமை என்பது மட்டும் நிறைவேறாமல் இருந்து வருகிறது. வெளிப்படாமல் இருந்து வருகிறது. இந்த மூலக்கருத்து இனி தான் வெளிப்பட வேண்டும். ஆனால் இன்றுள்ள சிருஷ்டிக்கிரம பரிணாம வளர்ச்சியில் இத்திட்டம் உள்ளடங்கியிருக்கக் காணோம். ஏன் இப்படி இருக்கிறது என்ற கேள்வி வீண் வேலையாகவே முடியும். மாஸ்டருடைய யோகத்தில் சிருஷ்டி பரிணாம வளர்ச்சியிலும் இந்த குறைபாடே மையக் கருத்தாக கொள்ளப்பட்டுள்ளது. இது புது கண்டுபிடிப்பாக இருக்கிறது. புத்தர் , கிருஸ்து, முகம்மது நபி, ஆதி சங்கரர் இவர்கள் வரிசையில் தோன்றியுள்ள மகானாகிய மாஸ்டர். சி.வி.வி. அவர்கள்தான் இந்த சிருஷ்டியிலுள்ள இக்குறைபாட்டை *சீரமைக்க* வேண்டும் என்ற பெரும் பணியை ஏற்றுக்கொண்டுள்ளார். சென்ற 30 வருட காலமாக (இது எழுதிய காலம் 1940) அதாவது இந்த யோகம் ஆரம்பிக்கப்பட 1910 ம் ஆண்டிலிருந்து இந்த யோகத்தில் சேர்ந்த மீடியம்கள் - சாதகர்கள்

பல ரெகுலேஷன்களை சீரமைப்புக் பணிகளை நம்பிக்கையோடும் எதிர்பார்ப்போடும் செய்து வந்துள்ளார்கள். இதே சமயம் மாஸ்டர் சி.வி.வி. அவர்களும் 1922 ம் வருடம் மே மாதம் 12ம் நாள் மறைந்த பிறகு பூமியின் மையத்திற்குச் சென்று இந்த பூமியை அழியாமல் நிற்கும்படி செய்யும் வேலையையே -ஸ்பேஸ் - பிக்சிங் என்ற வேலையையே செய்து வருகிறார். இடம் நிர்ணயிக்கப்பட்டு விட்டால் அந்த இடத்தில் படம் நிலைத்து நிற்கும் "வென் தி ஸ்பேஸ் ஈஸ் பிக்சட் தி பிக்சர் வில் ஸ்டான்ட் When the space is fixed the picture will stand" என்பதே மாஸ்டர் கூறியுள்ள வார்த்தைகளாகும். இந்த வார்த்தைகள் சதாகாலமும் இந்த மீடியம்களின் செவிகளில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. இவர்கள் சதாகாலம் பூமியின் மேலேயிருந்து கொண்டு தம் பணியை மாஸ்டர் உத்திரவுப்படி செய்து வருகிறார்கள். மாஸ்டர் அவர்கள் தமது ஸ்தூல தேகத்தோடு பூமியில் தோன்றுவார் என்ற திட நம்பிக்கையோடு பிரார்த்தித்து வருகிறார்கள். அந்த பெருநாள் வரும்போது மாஸ்டரிடமிருந்து சாஸ்வதம் அளிக்கும் சக்தி ஸ்திரத்துவம் - சிரஞ்சிவித் தன்மையை கொடுக்கும் சக்தி - மின்சாரத்தைப் போல ஒவ்வொரு மீடியமுக்குள்ளும் வரிசைக்கிரமமாகப் பாயும். இந்த வேலை ஸ்விட்ச்சை அழுத்தினால் மின்சாரம் நொடிக்கும் நேரத்தில் ஒவ்வொரு பல்புக்குள்ளும் பாய்ந்து எல்லா விளக்குகளும் ஏக காலத்தில் எப்படி பிரகாசமாக எரியுமோ அவ்வாறே எல்லா மீடியம்களும் சிரஞ்சீவித்தன்மையடைவார்கள். எல்லா மித்திரர்களும் இந்த சிரஞ்சீவித்தன்மையோடு சுயம் பிரகாசத்தோடு பிரகாசிக்கும்போது பூமியும் தன்னொளியோடு சுயஞ்சோதியோடு பிரகாசிக்கும். வேறு வெளிச்சத்தை பூமி எதிர்பார்க்காது சுயஞ்சோதியோடு பிரகாசிக்கும். அது சமயம் பூமியின் மீது மித்திரர்களும் சாஸ்வதத்தன்மையோடு ஜீவன் முக்தர்களாக என்றென்றும் வாழ்ந்துவருவார்கள். இவ்வாறு

மாஸ்டர் சி.வி.வி. அவர்கள் பூமியும் மனிதனும் (மாறுதலிலிருந்தும் அழிவிலிருந்தும்) விடுதலை பெற்று சர்வ சுந்திரத்தோடு தேவையற்றும் அழிவற்றும் வாழும் பெரும் பேறு இப்பூமியில் நிலை நிறுத்தப்பாடுபட்டு வந்துள்ளார் என்பதை உணர்ந்து அவரையும் அவரது பணியையும் போற்றி வருவோமாக.

முற்றும்



புது இணைப்பு

நான் கண்டதும், கேட்டதும், அறிந்ததும்.

(ஆ.ஷண்முகம்)

நான் 1945 டிசம்பர் மாதம் இந்த யோகத்தில் திரு. என். ஆர்.பி.வி. அவர்களிடம் தீஷை பெற்று 226 வது மீடியமாக சேர்ந்தேன். என்னை திரு.டி.எஸ் இராமானுஜம் அவர்கள் தான் அறிமுகம் செய்து வைத்தார். அதற்கு முன்பு சுமார் 2 ஆண்டுகாலம் திராவிட கழக தந்தை பெரியார் ஈ.வே.ரா. அவர்களிடம் பணியாற்றிய சமயம் சுற்றுப்பிரயாணத்தின்போது உடன் சென்று அவரது சொற்பொழிவுகளைக் குறிப்பெடுத்து அவரது பத்திரிகையான விடுதலைக்கு அனுப்புவது வழக்கம். அதன் காரணமாக திரு. என்.ஆர்.பி.வி. அவர்களின் உரையாடல்களையும் குறிப்பெடுத்து திரு. இராமானுஜம் அவர்களிடம் கொடுத்து அச்சிட்டு மித்திரர்களுக்கு அனுப்பும் வழக்கம் ஏற்பட்டது. திரு. என்.ஆர்.பி.வி. அவர்கள் 1947 ம் வருடம் பிப்ரவரி மாதம் 21ம் தேதி மறைந்தார். இது 1947 பிப்ரவரி 23ம் தேதி வெளியிடப்பட்ட 6 வது சமாசாரக் கடிதத்தில் மித்திரர்கள் யாவருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே கடிதத்தில் 13ம் பக்கத்தில் நமது கடமை என்ற தலைப்பில் "மாஸ்டர் என். ஆர். பி.வி. யின் மித்திரர்கள் ஒவ்வொரு வரும் அவர் குடும்பத்தை எவ்வழியிலும் ரக்ஷிப்பது தன் கடமை என்று உணரவேண்டும். இக்காரணத்தால் "யோகா ஸ்கூல் நிதி" என்ற ஒரு பொது நிதியை ஆரம்பித்து ஸ்ரீபாலகிருஷ்ணன் (786 ராமஸ்வாமி கோயில் கீழ் தெரு, கும்பகோணம்) அதற்கு

பொக்கிஷதாராக இருக்க வேண்டுமென்று நான் அவரை கேட்டுக்கொள்ளப்போகிறேன். இந்நிதி மாஸ்டர் என். ஆர்.பி.வி. குடும்பத்தை ரசஷிப்பதற்கும் யோகாஸ்கூலை பழுது பார்த்து எப்பொழுதும் நல்ல நிலையில் வைத்துக்கொண்டிருப்பதற்கும், யோக விஷயமாய் பிரசாரம் செய்வதற்கும், பணம் இருப்பதை யொட்டி யோகாஸ்கூல் மீடியங்களாயுள்ள ஏழைகளை ஆதரிப்பதற்கும் உபயோகப்படுத்தப்படும். இன்று முதல் மாதக் கட்டணங்களை அனுப்பும் படி கேட்டுக்கொள்கிறேன்''. என்று இராமானுஜம் அவர்களால் பிரசுரமாகியுள்ளது.

ஆகவே இராமமூர்த்தியவர்களின் குடும்பத்தாருக்கு மானேஜ்மெண்டு உரிமை கொடுத்து உயில் எழுதி வைக்கப்பட்ட சங்கதி அது சமயமோ பிறகு 1994 மே மாதம் வரையிலோ யாருக்கும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. 1937 ஜூன் மாதம் 21ம் தேதி எழுதப்பட்ட உயில் சுமார் 57 ஆண்டுகாலம் வெளியிடப்படாமலும் நடைமுறைப்படுத்தாமலும் இருந்து வந்துள்ளது. மேலும் திரு. இராமமூர்த்தியவர்கள் மாஸ்டர் என்.ஆர்.பி.வி. பற்றி எழுதி (1990க்குப்பிறகு) வெளியிட்ட ஆங்கில புத்தகத்திலும் இந்த உயில் விஷயம் குறிக்கப்படவில்லை. ஆனால் அந்த புத்தகத்தில் 1936 செப்டம்பர் மாதம் கட்டிடம் கிரயம் வாங்கப்பட்டதும் மாஸ்டர் சி.வி.வி.யின் 70வது பிறந்த தின விழாவின் போது அதாவது 1937 ஆகஸ்டு 19ம் தேதி இந்த கட்டிடம் புதுப்பிக்கப்பட்டு யோக பயிற்சிக்காக அற்பணிக்கப்பட்டதும் அது சமயம் பழைய மித்திரர்கள் யாவரும் வந்து கலந்து கொண்டார்கள் என்பதும் பக்கம் 49 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. உயில் எழுதப்பட்ட தேதி 21.6.1937. அற்பணிக்கப்பட்டதேதி 19.8.1937. அதாவது இரண்டு மாதம் கழித்தே பொதுக்கூட்டத்தில் அதுவும் மாஸ்டர் சி.வி.வி. அவர்களின் பிறந்த தின விழாவில் அர்ப்பணம் செய்யப்பட்டு விட்ட நிலையில் உயில் ரத்தாகி விட்டது என்பதும்

அதனால் தான் வெளிப்படுத்தாமலும் நிறை வேற்றப்படாமலும் கைவிடப்பட்டது என்பதுதானே அர்த்தம். இந்த அர்ப்பணம் இராமமூர்த்தி அவர்கள் முன்னிலையில் தானே நடந்துள்ளது. அதை அப்போது இவரும் இவரது தாயாரும் ஒப்புக்கொண்டதாகத்தானே அர்த்தம். அதனால் தான் 1994 மே வரை இவர்கள் மௌனமாக இருந்துள்ளனர்.

இந்த அர்ப்பணத்தை உறுதிப்படுத்தித் தானே திரு.இராமானுஜம் அவர்கள் தனது "அதீத காயகல்பா" என்ற புத்தகத்தில் இந்த கட்டிடத்தை யோகாஸ்கூல் சொத்தாக குறிப்பிட்டு அதை பராமரிக்க நிதி கேட்டு விண்ணப்பம் செய்துள்ளார். உண்மையிப்படியிருக்க மித்திரர் குழு ஏதோ சதி செய்து இவர்களது சொத்தை அபகரித்துக்கொண்டதாக கண்ணீர் விட்டு நமக்குச் சாபம் கொடுத்துக் கொண்டிருப்பது திரு. இராமமூர்த்தி அவர்களின் மனச்சாட்சிக்குப பொருந்துமா என்பதை மித்திரர்கள் சிந்திக்க வேண்டும்.

மாஸ்டர் என்.ஆர்.பி.வி. அவர்கள் மறைவுக்குப்பிறகு திரு. எ.டி. தியாகராஜபிள்ளை (சிதம்பரம்) திரு.எம்.முருகையா பிள்ளை (உட்கடை) திரு. கோவிந்தராசலு நாயுடு (கும்பகோணம்) திரு. நடராஜ பிள்ளை (திருப்புறம்பியம்) திரு.துரைரத்தினம்பிள்ளை (சோழன் மாளிகை) ஆகிய மித்திரர்களைக்கொண்ட குழு திரு. பாலகிருஷ்ணன் (கும்பகோணம்) அவர்களை பொருளாளராகக் கொண்டு சங்க நிர்வாகம் நடந்து வந்துள்ளது.

1952 ல் எனது திருமணம் திரு. இராமானுஜம் அவர்கள் தலைமையில் பெரியார் ஈ.வே.ரா. அவர்களுக்குச் சொந்தமான சென்னை மீரான் சாஹிப் தெரு கட்டிடத்தில் (சென்னை காசினோ தியேட்டர் அருகில் உள்ளது). நடந்து முடிந்து அது முதல் என்

அண்ணனுடைய அச்சகத்தில் உதவி செய்து கொண்டு 1957ம் ஆண்டு வரை இருந்து வந்தேன். அப்போது யோகாலய வெளியீடுகள் யாவும் அவருடைய "செல்வம் அச்சகத்திலேயே" அச்சிடப்பட்டு வெளியாகி வந்தன. "ஜீவன் முக்தி" என்ற புத்தகமும் அங்குதான் அச்சாகியுள்ளது.

இந்த கால கட்டத்தில் தான் காமெட் வருகையை யொட்டியும் எனது எதிர்காலத்தைப்பற்றியும் தெரிந்து கொள்ள மைலாப்பூரில் படிக்கப்பட்டு வந்த ஜோதி நாடியைப்பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதில் எனக்கு என் உப ஜீவனத்திற்காக கலைமகள் சம்பந்தமாக தொழில் அமையும் என்றும் எனக்கு புஜண்டர் அவர்கள் ஞான காண்டம் வாசித்து வழி காட்டி வருவார் என்றும் வாசிக்கப்பட்டது. ஞான காண்டம் என்பதாலும் அது எல்லோருக்கும் பொது என்பதாலும் திரு.இராமானுஜம் அவர்களும் என்னுடன் வந்து அதைக்கேட்டு வந்தார்.

அந்த நாடியில் புஜண்டர் அவர்கள் "நற்பவி" என்பதை மாஸ்டர் என்.ஆர்.பி.வி. அவர்களின் பெயரோடு தொடர்பு படுத்தி அவர் தன்னுடைய பூலோக பிறவி என்றும் "நல்லது உண்டாகட்டும்" என்ற அர்த்தம் கொடுக்கும் "நற்பவி" தனது மூல மந்திரம் என்றும் வெகுவாக சிலாகித்து, அதை ஜபித்து வந்தால் அதுவே ஜோதியாக மாறி வால் நட்சத்திரமாகி வான மண்டலத்தில் பிரகாசித்து யோகம் பூர்த்தியடையும் என்றும் எங்கெங்கும் நல்லதே நடந்து தீமைகள் யாவும் பறந்தோடி எங்கும் சுபசாந்தி நிலவுமென்றும் சொன்னார். இதனால் நற்பவி ஜபம் யோகாலயத்தில் தொடங்கியது. இது முருகையா போன்ற மித்திரர்களுக்கு ஒப்புதல் ஏற்படாமல் சர்ச்சை ஏற்பட்டது. இதன் காரணமாக 1964ம் ஆண்டு முதல் திரு. இராமானுஜம்

அவர்களின் வருகையும் வழி காட்டுதலும் குறைந்து விட்டது. மித்திரர் இராமானுஜம் மன உற்சாகம் குன்றி உடல் நலமும் பாதிக்கப்பட்டார். நானும் 1957 செப்டம்பர் மாதம் அவருடைய பண உதவியுடன் சென்னை பிராட்வேயில் அச்சகம் துவங்கி அதில் முழு நேரப்பணியாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதால் எனது கும்பகோண வருகை தடைப்பட்டுப்போனது.

1967 மே மாதம் திரு. இராமானுஜம் அவர்களும் மறைந்தார். அதன் பிறகு திரு. முருகையா அவர்களின் வழி காட்டுதலுடன் யோகாலயப் பணி தொடர்ந்து நடந்து வந்தது. அவரும் 1972 ஜனவரி மாதம் மறைந்தார். அதன்பிறகு திரு. எ.டி.தியாகராஜ பிள்ளை பொருளாளராக இருந்து வந்து பிறகு, திரு. கோவிந்தராஜலு நாயுடு பொருளாளராக பொறுப்பேற்று யோகாலய நிர்வாகம் நடைபெற்று வந்தது. அது சமயம் தான் மகாதேவ ஐயர் மகன் துரைசாமி அவர்கள் யோகாலயப்பணியில் ஈடுபட்டு யோகாலய பராமரிப்பு வேலையைச் செய்தும் வருடாந்திர கூட்டங்களை ஒழுங்காக நடத்தியும் மித்திரர்களுக்கு உற்சாகமூட்டி வந்தார். அவருடைய செல்வாக்கில் பொறாமை கொண்ட இராமமூர்த்தி அவர்கள் கோவிந்தராஜலு துணையுடன் அவரை வெளியேற்றி விட்டார். நான் 1984 வரை அச்சகத்தை மிகவும் சிரமத்தோடு நடத்தி அதன் பிறகுதான் கடன் தொல்லைகளிலிருந்து மீள முடிந்தது. கொஞ்சம் ஆத்மீக சிந்தனையில் ஈடுபட அவகாசம் கிடைத்தது. துரைசாமியின் மறைவுக்குப் பிறகு யோகாலயப் பணி ஸ்தம்பித்துவிட்டது. இந்த நிலையில் தான் திரு. குஞ்சு அவர்கள் என்னை யோகாலயப்பணிக்கு அழைத்தார். இராமமூர்த்தியும் அதை எதிர்க்கவில்லை.

1988 முதல் நான் தொடர்ந்து யோகாலய கூட்டங்களில் பங்கு கொள்ள ஆரம்பித்தேன். குஞ்சு அவர்கள் ஆந்திரப்பிரதேசம் பூராவும் சென்று நம் யோகத்தைப் பற்றியும் யோகாலயத்தின் நடப்பு பற்றியும் பேசி வந்தார். எனவே அவர்களிடம் நன்கொடை வசூலிக்கலாம் என்ற எண்ணம் ஏற்பட்டு சங்கத்தை பதிவு செய்து அதன் மூலம் ரசீது கொடுத்தால் நம்பிக்கை ஏற்படும் என்று சொல்லி அதற்கான சட்ட திட்டங்கள் வகுத்து மித்திரர்களிடம் ஒப்புதலும் பெறப்பட்டது. அந்த நகலில் மித்திரர் இராமமூர்த்தி அவரது துணைவியார், மகன் நற்பவி மூவருமே கையெழுத்து போட்டுள்ளார்கள். பதிவு செய்யும் நாள் நெருங்கியதும் இராமமூர்த்தி பின் வாங்கிக் கொண்டார். ஆனால் திரு. சம்பந்தம் பிள்ளை என்ற மித்திரரால் திரு. கோவிந்தராசலு நாயுடு உதவியுடன் 1990 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் சங்கம் பதிவு செய்யஃப்பட்டுவிட்டது. பதிவு செய்த பிறகு நன்கொடை சேர ஆரம்பித்தது. பணம் வர ஆரம்பித்ததும் நிர்வாகக் குழுவில் சேர இராமமூர்த்தி முன் வந்தார். அவர் 21.9.90 முதல் காரியதரிசியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு 30.5.92 ல் காரியதரிசி பதவியிலிருந்து தலைவராக பொறுப்பேற்று 31.5.93 வரை இருந்திருக்கிறார். அதன் பிறகு அவர் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு தலைமைப் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டு இன்று வரை அந்த பொறுப்பில் இருந்து வருகிறேன். செலவு போக மிகுதியாக இருந்த பணம் U.T.I. இல் வைப்பு நிதியாக செலுத்தப்பட்டு தவணை முடிந்த பிறகு கட்டிட வேலைக்காக எடுத்துச் செலவாக்கப்பட்டது. சங்கத்தின் நிர்வாகத்தில் இருந்தபோது மாஸ்டர் என்.ஆர்.பி.வி.க்கு குரு காணிக்கையாக முதலில் சிறிது காலம் ரூ.50 பிறகு சில காலம் ரூ.100ம் கடைசியில் ரூ.150 ஆகவும் திரு.இராமமூர்த்தி குடும்பத்துக்கு கொடுக்கப்பட்டு வந்துள்ளது. இது சங்க பதிவேட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

சங்கத்திற்கு நன்கொடை கொடுப்பவர்கள் பெரும்பாலும் ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாகவும் மாஸ்டர் சி.வி.வி அவர்கள் நாமத்தையே உச்சரித்து பிரார்த்திப்பவர்களாகவும் இருந்து வருவதால் "மாஸ்டர் சி.வி.வி. யோகா டிரஸ்ட்" என்கிற அமைப்பு 1994 மார்ச்சு மாதம் 16ந் தேதி சென்னையில் பதிவு செய்யப்பட்டது. திரு. இராமமூர்த்தியவர்கள் முதலில் அதில் அங்கம் வகிக்க ஒப்புக்கொண்டு பிறகு கடைசி நேரத்தில் மறுத்துவிட்டார். அதனால் அவரின்றியே பதிவு செய்யப்பட்டு இன்றும் செயலாற்றி வருகிறது.

இதன் பிறகு தான் கட்டிடத்தின் தகர கூரையை நீக்கிவிட்டு கான்க்ரீட் கூரைபோட முடிவெடுக்கப்பட்டு நன்கொடை விண்ணப்பம் அச்சடித்தனுப்பப்பட்டது. நன்கொடை ரூ. 75000 வரை சேர்ந்ததும் காண்ட்ராக்டரை தேர்ந்தெடுத்து வேலையை துவங்க முற்படும்போது தான் 1994 மே மாதம் " உயில்படி இந்த கட்டிடம் எங்களுக்குச் சொந்தம் ஆகி விட்டது. இப்போது இதை புனர் நிர்மணம் செய்ய எங்களுக்கு விருப்பமில்லை. எனவே வேலை துவங்கக்கூடாது" என்று ஆசேஷபனை செய்ய ஆரம்பித்தார் இராமமூர்த்தி.

அது சமயம்தான் சம்பந்தம் பிள்ளை விட்டுச் சென்ற புத்தக கட்டில் இருந்து "அதீத காய கல்பா" என்ற ஆங்கில புத்தகத்தைப் படித்துப் பார்த்து அதில் கட்டிடம் சங்கத்திற்கு அற்பணிக்கப்பட்டுள்ள விஷயம் தெளிவாகத்தெரிய வந்தது. அதைப்படித்துக்காட்டி ஆக்ஷேபனையை மறுத்து விட்டு கட்டிடத்தை இடித்துக்கட்டுவதென்று தீர்மானம் போட்டு விட்டோம். அதன் பிறகு அதில் இவரும் பொருளாளர் என்ற முறையில் கை யெழுத்து போட்டுள்ளார்.

1994 ஜுன் மாதம் கட்டிட வேலை ஆரம்பித்தது. திரு. இராமமூர்த்தியவர்களே திரு.காந்திசீனிவாசன் என்பவரை உதவிக்கு வைத்துக்கொண்டு கட்டுமானப்பணிகளை மேற்பார்வை பார்த்து வந்தார். அதற்கு செலவு தொகையாக தினமொன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.30 வீதம் 60 ரூபாய் எடுத்துக்கொண்டு 1994 டிசம்பர் வரையிலான வேலைக்கு ரூ.10000க்கு மேல் கணக்கெழுதிக் கொடுத்துள்ளார்.

கட்டிட வேலைக்கு சுமார் இரண்டரை லட்சத்திற்கு மேல் சிலவாகி வசூல் போதாமல் எனது சொந்த பணம் ரூ.30000 சிலவாகியது. இந்த தொகைக்காக நான் கட்டிடத்தை எங்கு அடகு வைத்து விடக்கூடுமோ என்று சந்தேகப்பட்டு அதைத்தடுக்க வேண்டி கல்வெட்டு ஒன்று பதித்து விடலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. அந்த கல்வெட்டிற்கான வாசகம் எழுதப்பட்டு சங்க பதிவேட்டில் குறிக்கப்பட்டு பிறகு அதே போல் எழுதப்பட்டு 1995 ஜனவரியில் சுவற்றில் பதிக்கப்பட்டு விட்டது. *அதில்* அர்ப்பண விஷயமும் அது சங்கத்திற்கு சொந்தமானதால் அதை விற்கவோ அடகு வைக்கவோ வாடகைக்கு விடவோ யாரொருவருக்கும் உரிமையில்லை என்றும் வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளது. காங்க்ரீட் கட்டிடம் அமைக்கப்பட்ட பிறகு இராமமூர்த்தி குடும்பத்தினருக்கு உயில்படி தங்களுக்கு சொந்தமாகியிருக்கும் கட்டிடத்தை ஏன் நாமே விற்று விடக்கூடாது என்ற ஆசை ஏற்பட்டு 1995 ஏப்ரல் மாதத்தில் திரு. கோவிந்தராயா என்பவரை அழைத்து வந்து அளவெடுத்துள்ளார்கள். அதைப் பார்த்த திரு. குஞ்சு அவர்களுக்கு பயம் ஏற்பட்டு எனக்கு போன் மூலம் தெரிவித்தார். அளவு வேலை முடிந்த பிறகு கல்வெட்டைப் பார்த்த ராயா அவர்கள் இது பொதுச் சொத்து, "நான் தர்ம சொத்தை வாங்க

மாட்டேன்'' என்று தெரிவித்திருக்கிறார். இதைக் கேட்டதும் இராமமூர்த்தி மகன் நற்பவிக்கு ஆத்திரம் பொங்கி வழிய ஆரம்பித்தது. மறு நாளே யோகாஸ்கூலுக்கு வந்து கல்வெட்டை எடுத்து விடும்படியும் இல்லாவிட்டால் தாங்களே வெட்டி எடுத்து விடுவதாகவும் எச்சரித்துப்போனார். இதையறிந்து பிறகு திரு.ராயா அவர்களையே நேரில் திரு. வீரய்யா அவர்களோடு சென்று என்ன நடந்ததென்று விசாரித்தேன். அவர் கட்டிடம் கட்டப்பட்டிருப்பதால் அவர்களுக்கு கட்டிட அடிமனைக்கு கிரயம் தர வேண்டுமென்றும் உயில்படியான தர்மத்தை நடத்த வேண்டியிருப்பதால் அடிமனை கிரயத்தில் பாதி தொகையாக பணம் கொடுத்து சமாதானம் செய்து கொள்ளும்படியும் தெரிவித்தார். நானும் மற்ற மித்திரர்களுடன் கலந்து கொண்டு க்ரயதொகையாக ரூபாய் ஒரு லட்சம் கொடுப்பதற்கு ஒப்புக்கொண்டோம். ஆனால் நற்பவி அவர்கள் கட்டிடம் தற்போது 10 லட்சம் பொறுமாதலால் ரூ.7 லட்சம் தர வேண்டும் என்றும், இன்றேல் கோர்ட்டில் வழக்கு தொடர நேரிடும் என்றும் தெரிவித்து விட்டார். இதைக் கேட்ட பிறகு சங்க கட்டிடத்தை பாதுகாக்க வேண்டி நீதிமன்றத்தில் கட்டிடம் சங்கத்திற்கு சொந்தமானதால் அது சம்மந்தமாக வழக்கு எது வந்தாலும் சங்கத்திற்கு அறிவிப்பு இல்லாமல் தீர்மானிக்கப்படக்கூடாது என்று கேவிட் மனு போட்டோம். இதைக் கண்ட பிறகு திரு. ராமமூர்த்தி தம் புத்திரர்களோடு சேர்ந்து உரிமையைக் கோரி 1995ல் வழக்கு 408/95 என்பதாக பதிவு செய்து விட்டார். ஆனால் நாம் தான் வழக்கு தொடர்ந்ததாக பொய் கூறி வந்தார்.

தன் வழக்குக்கு ஆதாரமாக மேற்படி உயிலையும் அதற்கு ஆதாரமாக தான் தத்து எடுத்துக்கொள்ளப்பட்ட 11.7.45 தேதியிட்ட ஸ்வீகார பத்திரத்தையும் மற்றும் எனது கடிதங்கள் சிலவற்றையும் ஆதாரமாக தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு

விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சமாதான ஒப்பந்தமொன்று எழுதப்பட்டு நீதிமன்றத்திலும் ஒப்படைக்கப்பட்டது. எனினும் திரு. நற்பவி ஒப்புக் கொள்ளாததால் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது அதீத காய கல்பா என்ற புத்தகம் முதல் ஆதாரமாகவும் சங்க பதிவேடு, சங்க வரவு சிலவு கணக்குகள், இராமமூர்த்தி சங்க சார்பில் எழுதியிருந்த கடிதங்கள்,அவர் எழுதிய புத்தகம், மணியார்டர் ரசீதுகள் ஆக மொத்தம் 39 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

துர் அதிருஷ்டவசமாக நமது ஆவணங்களை சட்ட ரீதியாக பரிசீலிக்காமலும் 50 வருட கால சங்க நிர்வாகத்தின் அநுபவ பாத்தியதையை கருத்தில் கொள்ளாமலும் உயிலை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு இராமமூர்த்திக்குச் சாதகமாக 25.4.2000ம் தேதியில் தீர்ப்பு வழங்கப்பட்டது. உடனடியாக தீர்ப்பை எதிர்த்து 93/2000 என்ற எண்ணிக்கை கொண்ட மேல் முறையீட்டு மனுதாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு 27.7.2000 வரை வாய்தா போட்டு நிலுவையில் இருந்தது.

மேற்படி சாதகமான தீர்ப்பு நகல் தமக்குக் கிடைத்த மறு தினமே அதாவது 2000 ஜூலை மாதம் 9ம் தேதியன்று திரு. இராமமூர்த்தியும் நற்பவியும் மற்றும் அவரது மாமனாரும் கூலியாட்களுடன் யோகாஸ்கூலுக்குள் நுழைந்து சுவற்றில் பதித்திருந்த கல்வெட்டுக்களை துணிகரமாக கட்டப்பாரையால் பேர்த்தெடுத்து குஞ்சு அவர்களை வெளியேறும்படி மிரட்டியிருக்கிறார்கள். இதைக் கேள்விப்பட்டதும் நான் கும்பகோணம் வந்து காவல்துறை இன்ஸ்பெக்டரிடம் புகார்

கொடுத்தோம். புகாரை விசாரித்த இன்ஸ்பெக்டர் உரிமை இயல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் மேற்கொண்டு சங்க நடவடிக்கையில் இராமமூர்த்தி தலையிடக் கூடாது என்று ஒப்புதல் மட்டும் வாங்கிக் கொண்டு வேறு நடவடிக்கை எடுக்காமல் இருந்து விட்டார்.

பிறகு குற்றவியல் நீதி மன்றத்தில் சங்கத்தின் சார்பில் வழக்கு பதிவு செய்தோம். அதன் மூலம் நடவடிக்கை எடுத்து வழக்கு காவல்துறையால் பதிவு செய்யப்பட்டு இராமமூர்த்தி முதலியவர்கள் சிறைப்படுத்தப்பட்டு பிறகு ஜாமீனில் விடப்பட்டு சுமார் இரண்டாண்டு காலம் வழக்கு நடைபெற்று சாக்ஷிகள் சரியாக சாக்ஷியம் அளிக்காததால் வழக்கு தள்ளுபடி ஆனது.

இடையில் நமது மேல் முறையீடு (93/2000) 2001ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ம் நாள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அதே மாதம் 20 ம் தேதி சங்கத்தின் மேல் முறையீட்டு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு கீழ்கோர்ட்டு தீர்ப்பு ரத்தாகி கீழ்க்கோர்ட்டில் வாதிகள் தரப்பில் தாக்கலான வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டு சங்கத்திற்கு முற்றிலும் சாதகமான தீர்ப்பு முதலாவது சார்பு நீதிமன்றத்தில் வழங்கப்பட்டது.

இந்த தீர்ப்பை ஒப்புக் கொள்ள மனமில்லாமல் இதை எதிர்த்து திரு. இராமமூர்த்தியவர்களும் அவரது புத்திரர்களும் S.A. 1081/2002 ஆக சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு பதிவு செய்துள்ளார்கள்.

இந்த வழக்கு 2003 ஜூலை மாதம் 17ம் தேதி விசாரிக்கப்பட்டு இராமமூர்த்தியின் மனுமட்டும் ஏற்கப்பட்டு

மற்றவர்களுக்கு உரிமையில்லை என்று கீழ்க்கோர்ட்டிலேயே தீர்ப்பாகிவிட்டதாலும் அதை எதிர்த்து கூடுதல் சார்பு மன்றத்தில் வழக்கு தொடரப்படாதாலும் உயர்நீதி மன்றத்தில் வழக்குபோட உரிமையில்லை என்று தள்ளுப்படி செய்யப்பட்டு விட்டது. இந்த வழக்கு பரிசீலனைக்கு வர இன்னும் பல ஆண்டுகள் ஆகக்கூடும் (சுமார் 10 ஆண்டுகளுக்கு மேல்) என்று நமது வழக்கறிஞரால் தெரிவிக்கப்படுகிறது.

தீர்ப்பின் நகல்கள்

முதன்மை மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம் கும்பகோணம் 25.4.2000ம் தேதி பக்கம் - 17. 23வது பாரா

மேலும் முதல் வாதிகளுக்குப் பிறகு (இராமமூர்த்தியின் புத்திரர்) 2, 3 வாதிகளுக்கு (இராமமூர்த்தியின் புத்திரர்கள் நற்பவி பாலசந்திரன் ஆகிய இருவர்களுக்கு) உரிமை உண்டு என்று கோரிய பரிகாரம் 2, 3 வாதிகளுக்கு கிடைக்கக் கூடியதல்ல என்று முடிவு செய்யப்பட்டுள்ள நிலையிலும் 2, 3 வாதிகளை பொறுத்து கோரிய பரிந்துரைகளைப் பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

கூடுதல் சார்பு நீதிமன்றம் கும்பகோணம்

மேற்முறையீட்டு மனு 93/2000 தீர்ப்பு 20.12.2001. பக்கம் - 16.

பிரதிவாதிகள் சாக்ஷி ஆவணம் (1) 1940 வருடம் வெளியிடப்பட்ட புத்தகத்தில் என். ஆர். பி. வெங்கடாசலபதி என்பவர் கட்டிடத்தை யோகாலய மித்ர சங்கத்திற்கு கொடுத்து விட்டாரென்றும் மேலும் அந்த புத்தகத்தில் சங்கமானது அந்தக் கட்டடத்தை நிர்வாகம் செய்ய வேண்டுமென்றும் யோகப் பயிற்சியும் மற்றும் வகுப்புகளும் நடத்த வேண்டுமென்றும்

குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த புத்தகத்தின் மூலம் என். ஆர். பி. வெங்கடாசலபதி என்பவர் மேற்படி கட்டிடத்தையோ அல்லது சங்க நிர்வாகத்தையோ தான் எடுத்துக் கொள்ள வில்லை என்பதையும் பொது மக்களின் நன்மைக்காக கொடுத்துள்ளார் என்பதும் தெரிய வருகின்ற நிலையில் 1ம் வாதியும் கிட்டத்தட்ட 50 ஆண்டிற்குப் பிறகு வாதி சாக்ஷி ஆவணம் 1-(கிரயப்பத்திரம்) ஆவணம் 3-(ஸ்வீகாரப்பத்திரம்) 4- (உயில் பத்திரம்) ஆகியவற்றின் அடிப்படையில் உரிமை கோரியுள்ளது. சட்டப்படி ஏற்புடைய கோரிக்கையாக இல்லை.

பக்கம் - 18

பிரதிவாதிகள் சாக்ஷி ஆவணங்கள் 1 முதல் 39 வரையிலான ஆவணங்களும் பிரதிவாதிகள் சங்கத்திற்கு தங்களுடைய உழைப்பின் மூலமாக வருவாய் ஈட்டி நல்ல முறையில் சங்கத்தை நிருவிய ஸ்தாபகரின் குறிக்கோளுக்கிணங்க நடத்தி வருகிறார்கள் என அறிய முடிகிறது. அந்த நிலையில் சங்க நடவடிக்கைகளில் 1ம் வாதியும் தலைவராகவும் சிலகாலம் செயலாளராகவும் சில காலம் பொருளாளராகவும் செயல்பட்டு வந்துள்ள நிலையில் பிரதிவாதிகள் சங்கம் பொதுமக்களிடமிருந்து வசூல் செய்த பணத்தை வைத்து தாவா கட்டிடத்தில் ஆஸ்பெட்டாஸ் கூரையுடன் அமைந்த கட்டிடத்தை 1ம் வாதியின் அனுமதியின் பேரில் பராமரிப்பு செய்து கான்கீரிட் கட்டிடமாக மாற்றியுள்ளார்கள் என அறிய முடிகிறது. இந்த சங்கமானது தாவா கட்டிடத்தில் பொது நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் 1ம் வாதி, தாவா கட்டிடத்தில் இயங்கி வரும் சங்கத்தின் பணிகளுக்கு இடையூறு செய்ய வேண்டுமென்ற நோக்கோடும் தாவா கட்டிடத்தை அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தோடும் கறைப்படிந்த கைளுடன்

நீதிமன்றத்தை நாடியுள்ளாரென அறிய முடிகிறது. இந்நிலையில் தாவா கட்டிடத்தில் இயங்கி வரும் சங்கமும் இதன் ஸ்தாபகர் எந்த நோக்கோடு ஆரம்பித்தாரோ அந்த நோக்கோடுதான் இன்றளவும் செயல்பட்டு வருகிறது என அறிய முடிகிறநிலையில் 1ம் வாதியும் 1ம் எதிர்மேல் முறையீட்டாளரும் சுய லாபம் கருதி கீழமை நீதிமன்றத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என அறிய முடிகிறது. இந்நிலையில் கீழமை நீதிமன்றம் இந்த வழக்கின் தன்மையை அறியாமலேயே வாதிக்கு இலக்கம் 2, கீழ் டபீர் தெரு, கும்பகோணம் அமைந்துள்ள யோகாஸ்கூல் ப்ரெண்ட்ஸ் சொசைடியின் நிர்வாகத்தில் 1ம் வாதி - எதிர் மேல் முறையீட்டாளர் தான் நிர்வாக உரிமை படைத்தவர் எனவும் அதனைத் தொடர்ந்து பிரதிவாதிகள் / மேல் முறையிடுடாளர்களோ அவர்களது ஏஜெண்ட்டுகளோ அல்லது வேறு நபர்களோ 1ம் வாதி / எதிர் மேல் முறையீட்டாளரின் நிர்வாகத்தில் தலையிடக் கூடாது என விளம்புகை பரிகாரமும் அதைத் தொடர்ந்து உறுத்துக்கட்டளை பரிகாரமும் 1ம் வாதி/ எதிர் மேல் முறையீட்டாளருக்கு சாதகமாக கீழமை நீதிமன்றம் வழங்கியுள்ள பரிகாரம் சட்டப்படி ஏற்புடைய பரிகாரங்கள் அல்ல என தீர்வு செய்து கீழமை நீதி மன்றத்தில் வாதிகள் தாக்கல் செய்த வழக்கும் தள்ளுபடி செய்யத் தக்கது தான் எனவும் தீர்வு செய்கிறோம்.

முடிவில் இம் மேல் முறையீடு செலவுத் தொகையுடன் அங்கீகரிக்கப்பட்டு கீழமை நீதிமன்றம் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ரத்து செய்யப்பட்டு கீழமை நீதிமன்றத்தில் வாதிகள் தரப்பில் தாக்கலான வழக்கும் தள்ளுபடி செய்தும் உத்திரவிடுகிறோம்.

அன்பர்களே நமக்கு சாதகமாக இவ்வளவு நல்ல முறையில் தீர்ப்பமைந்திருந்தும் கூட பேராசையால் உந்தப்பட்டு இராமமூர்த்தி குடும்பத்தினர் ஏதோ சங்கம் தங்கள் சொத்தை அபகரித்துக் கொண்டதாக வருவோரிடமெல்லாம் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டு பெரிதும் வேதனைப்படுகிறோம்.

இது வரை இந்தக் கட்டிடத்திற்கு நன்கொடையாக வந்த பணத்தில் சுமார் 10 லட்சத்திற்கும் மேலாக சில விட்டிருக்கிறோம். மாதம் ஒன்றுக்கு மின்சாரக் கட்டணம் மட்டும் சுமார் 500 ஆகிறது. சுத்தம் செய்யும் வேலையாட்களுக்கு ரூ. 500 ஆகிறது. தற்சமயம் கட்டிட காப்பாளராக தொண்டாற்றிவரும் திரு. மகேஷ் அவர்களுக்கு உதவி தொகையாக ரூ.1000 கொடுத்து வருகிறோம். அப்புறம் தொலைப்பேசிக் கட்டணம், தபால் சிலவு முதலியவை கிட்டத்தட்ட ரூ.35,000 ஆகிறது. மாஸ்டர் அருளாலும் மித்திரர்களின் தாராள நன்கொடையாலும் சங்கப்பணி இடையூறின்றி தொடர்ந்து நடைபெற்று வருவது எல்லோக்கும் மகிழ்ச்சி தரக்கூடியதாகும்.

கட்டிடம் இன்றுள்ள நிலை

1994 ம் ஆண்டில் தகரக் கொட்டகையாயிருந்த கட்டிடம் இன்று மாடிக்கட்டிடமாக மாற்றப்பட்டுள்ளது. பிரார்த்தனைக் கூடம் முழுமையும் சலவைக்கல்லால் வேயப்பட்டுள்ளது. வசதிக்காக 4 குளியலறைகளும் 4 கழிப்பறைகளும் அமைக்கப்பட்டுள்ளன. பெண்கள் தங்க தனி அறையும் சமைத்து சாப்பிட ஒரு சமையலறையும் உள்ளது. தண்ணீர் தொடர்ந்து கிடைக்க 200 அடி ஆழ் குழாய்க்கிணறும் அமைக்கப்பட்டுள்ளது. முதல் மாடியில் கழிப்பறையோடு கூடிய குளியலறை அமைந்த

இரண்டு விருந்தினர் தங்கும் அறைகளும், விசேஷ கால சமையலுக்குக்காக வேண்டி ஒரு சமையலறையும் கட்டப்பட்டுள்ளது. உணவருந்துவதற்காக 1300 சதுர அடி கொண்ட பெரிய உணவுக் கூடமும் அமைக்கப்பட்டுள்ளது. இதன் தரை முழுமையும் பளிங்கு ஓடுகளால் பதிக்கப்பட்டுள்ளது.

தற்போது வெளியூர் மித்திரர்கள் குடும்பத்தோடும், மித்திரர்கள் குழுவாகவும் அவ்வப்போது வந்து தங்கியிருந்து பிரார்த்தனை செய்து மகிழ்ச்சியோடு செல்வது நம் சங்க நிர்வாகத்தினருக்கு பெரு மகிழ்ச்சியைத் தருகிறது.

ஆகவே மேற்படி வசதிகள் நிலைத்திருக்க வேண்டி மாஸ்டர் அருளால் உயர் நீதி மன்றத்தில் திரு. இராமமூர்த்தியவர்களின் மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்று உறுதியோடு மாஸ்டரிடம் பிரார்த்தித்து வருவோமாக.

மாஸ்டர் தொண்டில்
ஆ.ஷண்முகம்
22.4.2006

பாரதி பரிண்டர்ஸ்
35 ,வெங்கட மேஸ்திரி தெரு,
சென்னை - 600 001.
தொலைபேசி : 25224901


MASTER C.V.V. YOGA
FRIENDS' SOCIETY

